கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை மார்ச் 2011 ₹ 15/-





ஸ்ரீ ஸ்ரீ ராதா மாதவா – இஸ்கான் மாயாபூர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 3, இதழ் 3

மார்ச் 2011

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்**

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், மதுமதி பிரியா தேவி தாஸி, ராதா மதுராபதி தாஸ், ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை.

**பதிப்பகத்தார் அலுவலகம்:** ஹரே கிருஷ்ண நிலம், ஜுஹு சாலை, மும்பை - 400 049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை

2 சைதன்ய மஹாபிரபு என்பவர் யார்?

8 கிரிக்கெட் காய்ச்சல்

10 ஸ்ரீ ஸ்ரீ சிக்ஷாஷ்டகம்

12 ஸ்ரீதாம் மாயாபூர்

17 மருத்துவரின் கத்தி

19 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம் – பாகம் நான்கு

23 பிரபுபாதர் நூற்றந்தாதி

25 விஞ்ஞானமும் நம்பிக்கையும்

29 ஸ்ரீமத் பாகவதம்

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை— ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# சைதன்ய மஹாபிரபு என்பவர் யார்?

**சாஸ்திரங்களின் உதவியுடனும் ஆச்சாரியர்களின் போதனைகளாலும் மஹாபிரபுவின் நிலையினை உணருதல்.**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் மேற்கு வங்காளத்திலுள்ள மாயாபூரில் 1974ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் தேதியன்று நிகழ்த்திய உரை

*ஜெய ஜெய மஹாபிரபு ஸ்ரீ கிருஷ்ண
சைதன்ய
தாங்ஹார சரணாஷ்ரித சேய் பட தன்ய*

பரம புருஷ பகவானான ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவிற்கு நான் என் பணிவான வணக்கங்களை சமர்பிக்கின்றேன். எவரொருவர் அவரின் பாதங்களை சரணடைகின்றாரோ அவர் போற்றுதலுக்குரியவராகிறார். (சைதன்ய சரிதாம்ருதம், ஆதி லீலை 7.2)

சைதன்ய மஹாபிரபு சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணரே.


நமோ மஹா-வதான்யாய
க்ருஷ்ண-ப்ரேம-ப்ரதாய தே
க்ருஷ்ணாய-க்ருஷ்ண-சைதன்ய-
நாம்னே கௌர த்விஸே நம:

''மிகவும் கருணை வாய்ந்த அவதாரமே! நீர் சாக்ஷாத் கிருஷ்ணரே. இப்பொழுது சைதன்ய மஹாபிரபுவாக தோன்றியுள்ளீர். ஸ்ரீமதி ராதையின் பொன்னிற மேனியை ஏற்று, கிருஷ்ணரின் மீதான பூரண அன்பினை வெகுவாகப் பரப்பியுள்ளீர்கள். எங்களின் பணிவான வணக்கங்களை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்,'' என்று ஸ்ரீல ரூப கோஸ்வாமி கூறியுள்ளார்.

பகவான் சைதன்யர் கிருஷ்ணரே, இக்கலியுகத்தில்கிருஷ்ணரேஸ்ரீசைதன்ய மஹாபிரபுவாக நேரடி அவதாரமாகத் தோன்றினார். இவ்வுண்மையினை வேத இலக்கியங்களான மஹாபாரதம், புராணங்கள் மற்றும் உபநிஷத்துக்கள் உறுதி செய்கின்றன. வேத இலக்கியங் களின் சாரமான ஸ்ரீமத் பாகவதமும் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவை புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என ஏற்றுக்கொண்டுள்ளது.

கலி யுகத்தில் கிருஷ்ணரின் அவதாரமாக வருபவர் அக்ருஷ்ண, அதாவது கிருஷ்ணரின் நிறத்தினை ஏற்று வருவதில்லை என ஸ்ரீமத் பாகவதம் (11.5.32) கூறுகின்றது. சமஸ்கிருதத்தில் க்ருஷ்ண என்றால் ''கருமை'' என்று பொருள்படும். கிருஷ்ணர் நான்கு யுகங்களிலும் நான்கு வேறுபட்ட நிறத்துடன் தோன்றுகிறார் என்று சாஸ்திரங்களில் (ஸ்ரீமத் பாகவதம், 10.8.13) கூறப்பட்டுள்ளது. கிருஷ்ணரின் பெயர் சூட்டு விழாவில் கற்றறிந்த பிராமணரான கர்கமுனி, வெண்மை, சிவப்பு, மஞ்சள் என மூன்று வண்ணங்களில் முன்பு தோன்றிய உங்களது குழந்தை (கிருஷ்ணர்) தற்பொழுது கருமை நிறத்தில் தோன்றியுள்ளான் என்று கூறினார்.

வேத நாகரிகத்தில் குழந்தை பிறந்தவுடன் ஜாதகத்தைக் கணித்து அக்குழந்தையின் முந்தைய பிறவி மற்றும் எதிர்காலத்தினைக் கணக்கிடுவர். ஆனால் வறுமை மற்றும் வேறு பல



**ஆன்மீக ஆத்மாவானது கிருஷ்ணரின் நித்திய தாஸன் என்பதை எப்பொழுது ஒருவன் புரிந்துகொள்கின்றானோ, அதன் பின்னர் அவனுக்கு எவ்வித துன்பமும் கிடையாது.**

காரணங்களால் இப்பழக்கம் இன்று இல்லையெனினும், மனித வாழ்வின் புனிதப்படுத்தும் காரியங்களில் (சம்ஸ்காரங்களில்) இதுவும் ஒன்று. மனிதவுடல் பத்துவிதமான சம்ஸ்காரங்களால் தூய்மைப்படுத்தப்படுகின்றது.

அனைவரும் தாய் தந்தையின் மூலம் பிறவியெடுக்கின்றனர். நாய்களுக்கும் பூனைகளுக்கும்கூட தாய் தந்தையர் உண்டு. நாம் எப்பிறவியினை எடுத்தாலும் தாய் தந்தையர் உண்டு.

*ஜன்மே ஜன்மே சபே பிதா மாதா பாய்*
*கிருஷ்ண குரு நஹி மிலே பஜே ஹரி யேய்*

ஒவ்வொரு பிறவியிலும் தாய் தந்தையர் கிடைப்பர், ஆனால் ஒவ்வொரு பிறவியிலும் கிருஷ்ணரோ அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவோ கிடைக்க மாட்டார் என்று பிரேம விவர்தம் கூறுகின்றது. மனித வாழ்வு கிருஷ்ணருடைய கருணையினாலும் குருவின் கருணையினாலும் பக்குவமடைகின்றது. அக்கருணை மனித வாழ்வில் மட்டுமே அடையப்படும், நாய்கள் மற்றும் பூனைகளின் வாழ்வில் அல்ல.

சைதன்ய மஹாபிரபு. குருவாகவும் கிருஷ்ணராகவும் செயல் புரிகின்றார். சைதன்ய சரிதாம்ருதத்தின் ஆசிரியரான கவிராஜ கோஸ்வாமி, "கதியற்றவர்களின் ஒரே நம்பிக்கை" என்று முதல் ஸ்லோகத்தில் பகவான் சைதன்யரைப் பற்றிக் கூறிய பிறகு, இங்கு இரண்டாவது ஸ்லோகத்திலும் தம் வணக்கங்களை அர்ப்பணிக்கிறார்: *ஜய ஜய மஹாபிரபு ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய.*

## பிரபு, மஹாபிரபு

நித்யானந்த பிரபு, அத்வைத பிரபு என பகவானின் பக்தர்கள் அனைவரும் பிரபு என்று அழைக்கப்படுவர். ஆனால் பகவான் சைதன்யர், மஹாபிரபு எனப்படுகிறார். அனைவரிலும் உயர்ந்த பிரபுவாக, தலைமைப் பிரபுவாக அவர் அறியப்படுகிறார்; மற்ற அனைவரும் சேவகப் பிரபு ஆவார்கள். உதாரணமாக, நீங்கள் ஓர் அலுவலகத்தில் பணிபுரிந்தால், உங்களின் மேற்பார்வையாளரை உயர் எஜமானராக நீங்கள் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அவர் எஜமானர் அல்ல, மேலாண் இயக்குநரோ உரிமையாளரோ தான் அலுவலகத்தின் தலைவர் ஆவார். இருப்பினும், எவரெல்லாம் அவரின் கீழ் பணிபுரிகின்றார்களோ அவர்களும் பிரபு என்று அழைக்கப்படுவர். அனைத்து வைஷ்ணவர்களும் பிரபு என்று அழைக்கப்பட வேண்டும். அதுதான் பண்பு, ஆனால் சைதன்ய மஹாபிரபு, மஹாபிரபு எனப்படுகிறார்; ஏனெனில், அவர் அனைவரிலும் சிறந்த பிரபுவாவார்.

*ஏகலே ஈஸ்வர க்ருஷ்ண, ஆர ஸப ப்ருத்ய*
*யாரே யைசே நாசாய, ஸே தைசே கரே ந்ருத்ய*

கிருஷ்ணரே பரம ஆளுநர், மற்ற அனைவரும் அவரின் சேவகர்கள். அவர் சொன்ன வண்ணமே இவர்கள் செயல்புரிகின்றனர். ஜடவுலகின் ஆளுநராகும் எண்ணத்துடன் நாம் செயல்புரிகின்றோம். ஜட சக்திகளைப் பயன்படுத்தி அவற்றின் ஆளுநராக நாம் அனைவரும் எண்ணுகின்றோம். இதுவே வாழ்வின் போராட்டமாகும். ஜடவுலகின் ஆளுநராக நானும் எண்ணுகிறேன், நீங்களும் எண்ணுகின்றீர்கள், எனவே போராட்டம் ஏற்படுகின்றது. நீ ஏன் எஜமானராக இருக்கின்றாய் என நானும், நான் ஏன் எஜமானராக இருக்கின்றேன் என நீங்களும் சவால் விடுகின்றோம். இது தொடர்ந்து கொண்டே இருக்கும். இதுதான் ஜடவுலகின் இயற்கை. நாம் எஜமானர்கள் அல்ல என்றும், கிருஷ்ணர் அல்லது ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவே எஜமானர் என்றும் நாம் எப்போது உணர்கின்றோமோ, அப்பொழுது நமது அனைத்து பிரச்சனைகளும் தீர்ந்துவிடும்.

ஜீவ் க்ருஷ்ண தாஸ ஏ விஸ்வாஸ கோர்லே தோ ஆர் து:க நாய், "எப்பொழுது ஆன்மீக ஆத்மாவானது கிருஷ்ணரின் நித்திய தாஸன் என்பதை நீ புரிந்து கொள்கின்றாயோ, அதன் பின்னர் உனக்கு எவ்வித துன்பமும் கிடையாது," என பக்தி வினோத தாகூர் பாடுகின்றார். இதுவே எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வாகும்.

அனைவரும் எஜமானராக (பிரபுவாக) விரும்புகின்றோம். நீங்கள் பிரபுவாகலாம், அஃது ஒன்றும் மிகையானதல்ல. ஒரு வகையில் பார்த்தால் நாம் அனைவரும் பிரபுக்களே. உதாரணமாக, நான் ஒரு குடும்பஸ்தனாக இருந்தால், என்னுடைய குடும்பம், மனைவி, மக்கள், வேலையாட்கள், என்னைச் சார்ந்துள்ளவர்கள் என அனைவரையும் பராமரிப்பதால் நானும் பிரபுவே; நான் சிறிய அளவிலான பிரபுவாவேன். அதுபோன்றே அனைவரும் பிரபுக்களே. ஆனால் ஓர் உயர்ந்த பிரபு உள்ளார். அவர் அனைத்து பிரபுக்களுக்கும் பிரபுவானவர். அந்த மஹாபிரபு ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரே. அவர் கிருஷ்ணரே.

பிரம்ம சம்ஹிதையில் (5.1) ஈஸ்வர: பரம: க்ருஷ்ண: என குறிப்பிடப் பட்டுள்ளது. ஈஸ்வர: என்பதற்கு "ஆளுநர்" அல்லது "கட்டுப்படுத்துபவர்"

எனப் பொருள்படும். நாம் அனைவரும் ஏறக்குறைய சிறிய ஆளுநர்களே, ஆனால் எவரும் முழுமையான ஆளுநர் அல்ல. முழுமையான ஆளுநர் கிருஷ்ணரே. அதுபோன்று முழுமையான பிரபு, எஜமானர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவே.

## மஹாபிரபுவிடம் தஞ்சமடைதல்

அனைவருமே பிரபு என்றபோதிலும், எவரொருவர் மஹாபிரபுவின் தாமரைத் திருவடிகளில் சரணடைகின்றாரோ, *ஸேய் பட தன்ய*, அவர் போற்றுதலுக் குரியவர். வெறுமனே மனைவி, மக்கள், நாடு, போன்றவற்றிற்கு எஜமானர் களாக இருப்பதைவிட மஹாபிரபு வின் சேவகனாக இருப்பதில் திருப்தி யடையுங்கள். நீங்கள் பரம பிரபுவான, ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவிடம் சரணடையும் போது உங்கள் வாழ்க்கை வெற்றிகரமானதாகும். நீங்கள் புனித மடைவீர்கள்.

கடவுள் அல்லது மஹாபிரபுவின் சேவகனாவதென்பது மிகவும் கௌரவமான செயல், இச்செயல் எளிதானதல்ல. எனவே, எவனொருவன் பரம பிரபுவின் சேவகனாக ஆவதற்கு ஒப்புக்கொள்கின்றானோ, அவனது வாழ்வு புனிதமடையும்; மேலும் அது போற்றுதலுக்குரியதாகும்.

நித்தியமாக தொண்டு செய்யும் தளத்திற்கு வருவதே வைஷ்ணவர்களின் கொள்கையாகும். எஜமானராவது அல்ல. எஜமானராவதைவிட எஜமானரின் சேவகனாவதே வைஷ்ணவ தத்துவமாகும். *கோபீ-பர்து: பத-கமலயோர் தாஸ-தாஸானுதாஸ:*. பிராமணர்கள் தங்களை சத்திரியர்கள், வைசியர்கள், அல்லது சூத்திரர்களின் எஜமானர்கள் என நினைக்கின்றனர். சந்நியாசிகள் தங்களை வானபிரஸ்தர்கள் (குடும்ப வாழ்விலிருந்து ஓய்வு பெற்றவர்கள்), கிருஹஸ்தர்கள், அல்லது பிரம்மசாரிகளின் எஜமானர்கள் என நினைக்கின்றனர். அதுபோன்றே, குடும்பத் தலைவர்கள், சத்திரிய அரசர்கள் என அனைவரும் தங்களை எஜமானர்களாக நினைக்கின்றனர். நீங்கள் ஓரளவிற்கு எஜமானரே, ஆனால் நீங்கள் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவை அல்லது கிருஷ்ணரை எஜமானராக ஏற்கும் பட்சத்தில் உங்கள் வாழ்வு வெற்றி பெறும். இதுவே வாழ்வின் வெற்றிக்கான வழி என ஸ்ரீமத் பாகவதம் (1.2.13) பரிந்துரைக்கின்றது.

அர்ஜுனன் ஒரு சத்திரியன், போரிடுவது அவனது தொழில். அவன் குருக்ஷேத்திர போர்க்களத்தில் போரிட்டது ஏன்? நாட்டின் எஜமானராவதற்கே. இருப்பினும் அவன் கிருஷ்ணரின் நித்திய சேவகனாக இருந்தான். இதுவே வாழ்வின் வெற்றியாகும். ஜட வாழ்வில் எஜமானராகி விட்டோம் என்பதில் மட்டும் திருப்தியடையாதீர்கள். முழுமுதற் கடவுளின் தொண்டனாவதற்கு விரும்புங்கள், அப்போதுதான் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

ஏதேனும் சில சூழ்நிலைகளில் மட்டுமே நாம் எஜமானராக முடியும். ஆனால் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு எவ்வித நிபந்தனைகளுமற்ற எஜமானராவார், *நமோ மஹா-வதான்யாய க்ருஷ்ண ப்ரேம ப்ரதாய தே*. அவர் எஜமானர் என்பதால் அவரால் இந்த கிருஷ்ண பிரேமையினை எளிதாக விநியோகிக்க முடியும். பொதுவாக, கிருஷ்ண பிரேமை என்பது அடைவதற்கு மிகவும் கடினமாகும். அவ்வளவு ஏன்,



*ஹரி நாம சங்கீர்த்தனத்தில் பாடி ஆடியதன் மூலம், அனைவருக்கும் கிருஷ்ண பிரேமையை வழங்கிய ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு*

கிருஷ்ணரைப் பற்றி தெரிந்து கொள்வதே கடினமாகும்.

*மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு*
*கஸ்சித் யததி ஸித்தயே*
*யததாம் அபி ஸித்தானாம்*
*கஷ்சின் மாம் வேத்தி தத்த்வத:*

(பகவத் கீதை 7.3)

பல்லாயிரம் நபர்களில் யாரோ ஒருவரே தனது வாழ்வினை வெற்றிகரமானதாக மாற்ற முயல்கின்றார். அவ்வாறு முயலும் நபர்களில் எவரேனும் ஒருவரே தன் இயற்கையான நிலை என்ன என்பதை அறிவதில் வெற்றி பெறுகின்றார். அவர் கிருஷ்ணரை உணரலாம். இருப்பினும் அது நிச்சயமல்ல. கிருஷ்ணரை உணர்வது மிக மிகக் கடினமாகும்.

*ப்ரஹ்ம-பூத: பிரஸன்னாத்மா*
*ந ஷோசதி ந காங்க்ஷதி*
*ஸம: ஸர்வேஷு பூதேஷு*
*மத்-பக்திம் லபதே பராம்*

(பகவத் கீதை 18.54)

கிருஷ்ணரையும் அவரின் சேவையையும் புரிந்துகொள்வது மிகவும் உயர்ந்த நிலையாகும். அதற்கு, ப்ரஹ்ம பூத;, முற்றிலும் முக்தி பெற்ற நிலையை அடைய வேண்டும். அப்பொழுதுதான் கிருஷ்ணருக்கு சேவை செய்வது எப்படி என்பதை அறிய முடியும். இருப்பினும், இக்கடினமான விஷயங்கள்கூட வெகு எளிமையாக பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே ஸ்ரீல ரூப கோஸ்வாமி,

*நமோ மஹா-வதான்யாய*
*க்ருஷ்ண-ப்ரேம-ப்ரதாய தே*
*க்ருஷ்ணாய-க்ருஷ்ண-சைதன்ய-*
*நாம்னே கௌர த்விஸே நம:*

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

அவர் (சைதன்ய மஹாபிரபு) கிருஷ்ணரை மட்டும் தரவில்லை, கிருஷ்ண பிரேமையினையும் அளித்துள்ளார். நீங்கள் ஓர் உயர்ந்த நபரைக் காணலாம், ஆனால் அந்த உயர்ந்த நபரோடு அன்பான உறவினை ஏற்படுத்திக் கொள்வது எளிதல்ல. ஆனால் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவோ, கிருஷ்ணரை மட்டுமின்றி கிருஷ்ணருடனான அன்பான உறவையும் அனைவருக்கும் அளித்துள்ளார். இதுவே மனித குலத்திற்கு ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு வழங்கிய வரப்பிரசாதமாகும். நீங்கள் சைதன்ய மஹாபிரபுவின் தாமரைத் திருவடிகளின் கீழ் தஞ்சமடையும்போது, கிருஷ்ண பக்தி எளிதில் அடையப் பெறுகின்றது. சைதன்ய மஹாபிரபுவின் தாமரைத் திருவடிகளின் கீழ் நீங்கள் வந்துவிட்டால், கிருஷ்ணரைப் பெற்றுவிட்டீர்கள் என்று பொருள். இதுவே சைதன்ய சரிதாம்ருதத்தின் கூற்றாகும். சைதன்ய மஹாபிரபு வேறெதையும் வழங்கவில்லை, கிருஷ்ணர் மீதான அன்பினை மட்டுமே வழங்கியுள்ளார்.

## பெருமைமிகு நவத்வீபம்

இவ்வுயரிய வரத்தினை நமக்கு அளிப்பதற்காக சைதன்ய மஹாபிரபு தனது 24ஆம் வயதில், இந்த நவத்வீபத்தில் சந்நியாசம் ஏற்றுக் கொண்டார். இது மிகவும் புண்ணியம் நிறைந்த இடமாகும், இது சாதாரண இடமல்ல. வைஷ்ணவ பக்தரும் கவியுமான நரோத்தம தாஸ தாகூர், *கௌட மண்டல பூமி, யேபே ஜனே சிந்தாமணி தர ஹோய் விரஜபூமே வாஸ்*, என்று பாடுகின்றார். எவரொருவர் நவத்வீபத்தின் மகிமைகளைப் புரிந்து கொண்டுள்ளாரோ, அவர் பகவான் கிருஷ்ணரின் விருந்தாவனத்தில் வசிப்பவராகின்றார். விருந்தாவனத்திற்கும் நவத்வீபத்திற்கும் வேறுபாடு இல்லை என்பது சாஸ்திரங்களின் கூற்றாகும்.

எனவே, நரோத்தம தாஸ தாகூர் அருளிய *பிரார்த்தனை* என்னும் நூலையும், பக்திவினோத தாகூர் அருளிய நூல்களையும் படியுங்கள். அவை, குறிப்பாக நரோத்தம தாஸ தாகூரின் *பிரார்த்தனை*, பக்தியில் நாம் முன்னேறுவதற்கு மிகவும் உதவியாக அமையும். அவற்றைப் படித்து, புரிந்துகொள்வதன் மூலம், கிருஷ்ணரை எளிதில் புரிந்துகொள்ளலாம். இல்லையெனில், கிருஷ்ணரைப் புரிந்துகொள்வது எளிதல்ல. மிகப்பெரிய பண்டிதர்களாலும் சந்நியாசிகளாலும் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. தங்களைப் போன்றே கிருஷ்ணரும் ஒரு சாதாரண நபர் என்றும், அரசியல்வாதி என்றும், வரலாற்று நபர் என்றும் எண்ணுகின்றனர். மேலும், கோபியர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாலும், 16,000 ராணியரை மணம் புரிந்ததாலும். கிருஷ்ணரை ஒரு பெண்பித்தன் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

நாம் நம்முடைய சொந்த வழியைப் பின்பற்றினால், கிருஷ்ணரைப் புரிந்து கொள்வதில் தவறிவிடுவோம். மஹாபிரபுவின் வழியில் நாம் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள வேண்டும்.

*யாரே தேக, தாரே கஹ 'க்ருஷ்ண-*
*உபதேஷ்'*
*ஆமார் அக்ஞாய் குரு ஹனா தார'*
*ஏய் தேஷ*

"கிருஷ்ணரின் உபதேசங்களான பகவத் கீதையையும் பாகவதத்தினையும் பின்பற்றும்படி அனைவரிடமும் கூறுங்கள். இதன்படி ஆன்மீக குருவாக

**சைதன்ய மஹாபிரபு கிருஷ்ணரை மட்டும் தரவில்லை. கிருஷ்ணரின் மீதான உயர்ந்த அன்பையும் (கிருஷ்ண பிரேமையையும்) அளித்துள்ளார்.**

# மார்ச் 19, கௌர பூர்ணிமா, பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத் திருநாள்

மாறி அனைவரையும் விடுவியுங்கள்,'' (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய லீலை, 7.128) என்று சைதன்ய மஹாபிரபு நமக்குக் கூறுகின்றார். சைதன்ய மஹாபிரபு மனித உருவில் வந்ததால், அவரை ஒரு சாதாரண மனிதர் என்று எண்ணுகின்றனர். ஆனால், மஹாபிரபு, மனித உருவில் வந்தாலும் மனிதரல்ல. அவர் மனிதர்களுக்கெல்லாம் தலைவர்.

கிருஷ்ணரின் அம்சங்களாகிய நாம தர்மத்தின் சட்டங்களை மீறியதால், துன்பத்தில் உழல்வதைக் கண்டு மிகவும் இரக்கப்பட்ட கிருஷ்ணர், தாமே அவதரிக்கின்றார். *யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர் பவதி. தர்மஸ்ய க்லானி* என்பது, ''தர்மத்தின் பாதையிலிருந்து பிறழ்தல்'' என்று பொருள்படும். தர்மம் என்றால் என்ன? *தர்மம் து சாக்ஷாத் பகவத் ப்ரணீதம்.* தர்மம் என்பது கடவுளின் சட்டங்களாகும். கடவுளால் கொடுக்கப்பட்ட விதிமுறைகள், சட்டங்கள் இவையே தர்மம் எனப்படும். உதாரணமாக, அரசாங்கத்தினால் கொடுக்கப்படும் விதிமுறைகளே நாட்டின் சட்டங்களாகின்றன, நாட்டின் சட்டங்களை உங்களால் உருவாக்க முடியாது. அதுபோல கடவுளின் சட்டங்களான தர்மத்தையும் உங்களால் உருவாக்க இயலாது. தற்போது கலி யுகத்திலுள்ள அயோக்கியர்கள் தங்களுக்கென்று புதிதாக பல்வேறு தர்மங்களை உருவாக்குகின்றனர். ஆனால் அத்தகு தர்மங்களால் என்ன பலன்?

தற்போதைய ஆன்மீகவாதிகள் தங்களையே கடவுளாக கூறிக்கொள்கின்றனர். ஆனால் சைதன்ய மஹாபிரபு தன்னை ஒருபோதும், கிருஷ்ணர் என்று கூறியதில்லை. அவர் விருந்தாவனத்தில் இருந்தபோது, அவரைப் புகழும் பொருட்டு, ''நீங்கள் கிருஷ்ணரே'' என ஒருவர் கூறியதற்கு, தன்காதுகளைமூடிக்கொண்டு, ''இல்லை, இல்லை. அவ்வாறு கூறாதீர்கள்'' என்று கூறினார். தன்னையே கடவுளாகக் கூறிக்கொள்வது முட்டாள்தனத்தின் உச்சகட்டம் என்பதனை அவர் இதன் மூலம் உணர்த்தினார்.

சில மாயாவாதிகள், ''எல்லோரும் கடவுளே. நானும் கடவுள், நீங்களும் கடவுளே,'' எனக் கூறுகின்றனர். அவர்கள் அனைவரும் மூடர்களே. நமக்கு இத்தகு மலிவான கடவுள்கள் தேவையில்லை. நாம் கிருஷ்ணரை ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும், சாஸ்திரங்கள் மற்றும் ஆச்சாரியர்களின்படி சைதன்ய மஹாபிரபுவினை கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் ஆச்சாரியர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமாக. *க்ருஷ்ணாய க்ருஷ்ண சைதன்ய நாம்னே,* ''எம்பெருமானே, நீங்கள் கிருஷ்ணரே, கிருஷ்ண சைதன்யர் என்ற பெயரில் எழுந்தருளி, மிகுந்த கருணையுடன் கிருஷ்ண பக்தியினை வழங்குகின்றீர்கள்,'' என்று ரூப கோஸ்வாமி கூறுகின்றார்,

கிருஷ்ணரை கிருஷ்ணரால் மட்டுமே வழங்க முடியும். வேறு யாரால் முடியும்? கோடீஸ்வரனாக இல்லாமல் கோடிகளை தானமாக வழங்க இயலுமா? சைதன்ய மஹாபிரபு கிருஷ்ணரை (தன்னை) மிகுந்த கருணையுடன் விநியோகம் செய்தார். எனவே, கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவிடம் சரணாகதி அடைவீராக.

நீங்கள் அனைவரும் வெகு தூரத்தி லிருந்து (மாயாபூருக்கு) வந்துள்ளீர்கள். நிறைய பொருட்செலவும் செய்து வந்துள் ளீர்கள். இந்த பயணத்தினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். *ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய பிரபு நித்யானந்த ஸ்ரீ அத்வைத கதாதர ஸ்ரீ வாஸாதி கௌர பக்த விருந்த* என்னும் மந்திரத்தினை அனைவரும் உச்சரியுங்கள். நீங்கள் நிச்சயம் கிருஷ்ணரை அடைவீர்கள். இது சைதன்ய மஹாபிரபு பிறந்த இடம். யாரெல்லாம் சைதன்ய மஹாபிரபுவிடம் சரணாகதி அடைகின்றாரோ, அவர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

(தமிழாக்கம்: ஜெய கிருஷ்ண தாஸ்)

## வாசகர் கடிதங்கள்

நான் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறேன், சென்ற வருடம் கோவையில் உள்ள இஸ்கான் கோயிலுக்குச் சென்று வந்தேன். அங்கு ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாத பத்திரிகையைப் பற்றி தெரிந்து கொண்டேன், அதிலுள்ள வண்ணப்படங்கள் மற்றும் பகவத் கீதை, பாகவதம் விளக்க உரை என்னை மிகவும் கவர்ந்தது. நானும் நல்ல பல விஷயங்களைப் படித்து, அனைவருக்கும் அதனை எடுத்துரைத்து வாழ்வில் பயன்பெற உதவுங்கள்,

ல.மைவிழிச்செல்வி, திருப்பூர்

''திருமணம், ஒரு புனிதமான பந்தம்'' என்ற தலைப்பில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய கருத்துக்கள் அனைத்தும் சிந்திக்கத்தக்க நல் முத்துக்களாய் மின்னின. திருமணம் வெறும் புலனின்பத்திற்காக நடத்தப்படுகின்ற சடங்கு அல்ல... வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்ள உதவுகிற பந்தம் என்பதை அழுத்தமாக உணர்த்தியுள்ளார். திருமணம் செய்துகொள்ள விரும்புபவர்கள், செய்து கொண்டவர்கள் என அனைவரும் அறிந்து பயனடைய வேண்டிய அருளுரையாகும்.

த.சத்தியநாராயணன், சென்னை

ஜனவரி இதழில் வெளிவந்த ''திருமணம், ஒரு புனிதமான பந்தம்'' எனது மனைவிக்கு முழு நம்பிக்கையை வழங்கியுள்ளது. கிருஷ்ண பக்தியைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* எனது ஆன்மீக திருமண வாழ்விற்கு மிகவும் உதவியாக உள்ளது. இத்திருப்பணிக்கு மிக்க நன்றி.

திரிபுவனபதி தாஸ், துபாய்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




ஹரா என்னும் சொல் இறைவனின் சக்தியைக் குறிக்கின்றது; கிருஷ்ண, ராம என்னும் சொற்கள் இறைவனைக் குறிக்கின்றன. கிருஷ்ண என்றாலும் ராம என்றாலும் "மிகவுயர்ந்த ஆனந்தம்" என்று பொருள். இறைவனின் மிகவுயர்ந்த ஆனந்த சக்தியான ஹரா, விளிச்சொல்லாகும்போது ஹரே என்று மாற்றமடைகின்றது.

ஹரே, கிருஷ்ண, ராம என்னும் இந்த மூன்று வார்த்தைகள் மஹா மந்திரத்தின் தெய்வீக விதைகளாக அமைகின்றன. இம்மஹா மந்திரத்தை உச்சரித்தல், கட்டுண்ட ஆத்மாவிற்குப் பாதுகாப்பு அளிக்கும்படி இறைவனுக்கும் அவரது அந்தரங்க சக்தியான ஹராவிற்கும் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். தாயை எதிர்பார்த்த குழந்தையின் உண்மையான அழுகையைப் போன்றது இந்த உச்சாடனம். உன்னத தந்தையான ஹரியின் அல்லது கிருஷ்ணரின் கருணையைப் பெறுவதற்கு, அன்னை ஹரா பக்தனுக்கு உதவுகிறாள். இதனால் இந்த மந்திரத்தை நேர்மையுடன் உச்சரிப்பவர்களுக்கு பகவான் தன்னை வெளிப்படுத்துகிறார்.

எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை உச்சரிப்பதைத் தவிர, ஆன்மீக உணர்வை அடைவதற்கு இக்கலி யுகத்தில் வேறு எந்த வழிமுறையும் பயனுள்ளதாக அமையாது.

# கிரிக்கெட் காய்ச்சல்

கோடானுகோடி இந்தியர்களை பாதித்துள்ள கிரிக்கெட் காய்ச்சல் குறித்து ஒரு சிறிய ஆய்வு

**வழங்கியவர்: திரு. யுகாவதார தாஸ்**

## கிரிக்கெட் காய்ச்சல்

மலேரியா, டைஃபாய்டு, கிரிக்கெட் ஆகியவை இந்தியாவில் காணப்படும் பொதுவான காய்ச்சல்கள். இத்தகு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை நினைக்கும்போது, பசியை இழந்து மிகவும் அவதிக்குள்ளாகும் தீவிர நோயாளிகளையே நான் காண்கிறேன். அவர்களால் உண்ணவோ, உறங்கவோ, வேலை செய்யவோ இயலாது. கிரிக்கெட் என்னும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவன், தொ(ல்)லைக்காட்சியில் கிரிக்கெட் ஒளிபரப்பப்படும்போது, அங்கிருந்து எழுவதற்கோ வேலை செய்வதற்கோ மறுத்து, பசைபோல ஒட்டிக் கொண்டுள்ளான். அவன் தனது வாழ்வில் எந்தவித ஆக்கப்பூர்வமான வேலையையும் செய்ய மறுக்கிறான். கிரிக்கெட் காய்ச்சல் அதிகமாகும்போது ஆன்மீகப் பசியை அவன் இழந்துவிடுகிறான். தொலைக்காட்சிப் பெட்டியால் (கிரிக்கெட்டின் வடிவில்) வழங்கப்படும் ஊட்டச்சத்து இல்லாத உணவை மட்டுமே உண்கின்றான். கிரிக்கெட் வீரர்கள் முறையான உடற்பயிற்சியின் மூலம் தங்களது ஆரோக்கியத்தைப் பராமரிக்கின்றனர்; ஆனால் கிரிக்கெட்டைப் பார்ப்பவர்கள் 8 மணி நேர விளையாட்டை ஒரே இடத்தில் உட்கார்ந்து பார்ப்பதன் மூலம் அசைவற்றவர்களாக இருக்கின்றனர். சற்றே எண்ணிப் பாருங்கள்: உருளைக் கிழங்கு சிப்ஸை கொறிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் இல்லாமல் 8 மணி நேரம் செல்கிறது, இது போன்று 50 போட்டிகள்! ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை 16 சுற்றுகள் ஜபிப்பதற்கு தினமும் 2 மணி நேரம் தேவை, 8 மணி நேரத்தில் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அறிவுறுத்திய 64 சுற்றுகளை ஜபம் செய்து முடிக்கலாம். ஆனால் "நேரமில்லை" என்று சாக்கு சொல்லி ஜபம் செய்ய மறுக்கும் மக்கள் ஏராளம். அவர்களைப் பார்க்கும்போது எனக்கு முதலில் தோன்றுவது, கிரிக்கெட் பார்க்க அவர்கள் வீணடிக்கும் நேரமே.

## கிரிக்கெட் வைரஸ்

ஒவ்வொரு காய்ச்சலுக்கும் பின்னணியில் சில கிருமிகள் இருப்பதுபோல, கிரிக்கெட் காய்ச்சல் பரவுவதற்கும் சில கிருமிகள் காரணமாக உள்ளன. இந்த கிரிக்கெட் வைரஸ், ஏற்கனவே கிரிக்கெட் வைரஸிற்கு அடிமையானவர்களிடமிருந்து தொற்றிக்



*கிரிக்கெட் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தொலைக்காட்சிப் பெட்டியை வெறித்துப் பார்க்கும் மக்கள்*

**நமது மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாத 11 வீரர்களின் மீது நாம் ஏன் அவ்வளவு நம்பிக்கை வைக்க வேண்டும்? தன்னிடம் சரணடைபவர்களுக்கு மகிழ்ச்சிக்கான உத்தரவாதமளிக்கும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சரணடையலாமே!**

கொள்ளும். அந்த கிரிக்கெட் அடிமைகள், உண்பதும் கிரிக்கெட், சுவாசிப்பதும் கிரிக்கெட், இருமுவதும் கிரிக்கெட் என வாழ்கின்றனர். அதன் மூலம் கிரிக்கெட் கிருமிகளை மற்றவர்களுக்கும் பரவச் செய்கின்றனர். செய்தித்தாள்கள், தொலைக்காட்சி பெட்டி, விளம்பரப் பலகைகள் போன்றவை இக்கிருமிகளைத் தேக்கி வைத்திருக்கும் சாதனங்கள். இவற்றைச் சற்றேனும் அணுகினால் போதும், உடனடியாக நாமும் கிருமியால் தாக்கப்படுவோம். இந்தக் கிருமிக் கூட்டங்களிடமிருந்து முற்றிலும் விலகியிருப்பதே கிரிக்கெட் காய்ச்சல் நம்மைத் தாக்காமல் காப்பாற்றிக் கொள்ள சிறந்த வழியாகும்.

### கிரிக்கெட் நமது மதமா?

இக்காய்ச்சல் அதிகரித்து எல்லையைத் தாண்டும்போது, "கிரிக்கெட் நமது மதம்; சச்சின் நமது கடவுள்" என்ற பிரம்மைக்கு நோயாளி வருகின்றான். "சநாதன தர்மமே நமது மதம், கிருஷ்ணரே கடவுள்," என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவேளை காய்ச்சல் அதிகமானதால் நோயாளிகள் தங்களது நினைவை இழந்துவிட்டார்களா! தர்மம் அல்லது மதம் என்னும் வார்த்தையின் உண்மையான பொருள், "இயல்பான தன்மை" என்பதே. சர்க்கரையின் இயல்பு இனிப்பு; அதுபோலவே ஆத்மாவின் இயல்பு கடவுளுக்குத் தொண்டு செய்வதே. கடவுளுக்குத் தொண்டு செய்வதற்கான அந்த இயற்கையான தன்மையை ஆத்மா தூண்டிவிடும்போது, அவன் இயற்கையான மகிழ்ச்சியைப் பெற்று தன்னுள் ஆனந்தமடைகிறான். அத்தருணத்தில், அவனது மகிழ்ச்சி என்பது, இந்தியாவின் வெற்றியையோ தோல்வியையோ சார்ந்திருப்பதில்லை. 1983இல் இந்தியா உலக கோப்பையை வென்ற போது, நாடு முழுவதும் மகிழ்ச்சியடைந்தது; ஆனால் காலப்போக்கில் இந்தியா அந்நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டதால், அந்த மகிழ்ச்சியும் நழுவிச் சென்றுவிட்டது. இருப்பினும், கிரிக்கெட் என்னும் மோகம் மட்டும் அப்படியே இருக்கின்றது—வரலாறு மீண்டும் திரும்பும், இந்தியா கிரிக்கெட் உலகில் கொடிகட்டிப் பறக்கும் என்ற நினைப்பில்! இந்தியா ஜெயிக்கலாம் அல்லது ஜெயிக்காமல் போகலாம். இதன் அர்த்தம் என்னவெனில், நாம் மகிழ்ச்சியடைவதற்கு 50% வாய்ப்பு மட்டுமே உள்ளது. நமது மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாத 11 வீரர்களின் மீது நாம் ஏன் அவ்வளவு நம்பிக்கை வைக்க வேண்டும்? அதற்குப் பதிலாக, எல்லா மதங்களையும் துறந்துவிட்டு தன்னிடம் சரணடைபவர்களுக்கு மகிழ்ச்சிக்கான உத்தரவாதமளிக்கும் கிருஷ்ணரிடம் சரணடையலாமே; எல்லா மதங்களையும் என்றால், கிரிக்கெட் போன்ற போலியான மதங்களும் அதில் அடங்கும்.

### கிரிக்கெட் காய்ச்சலைத் தடுத்தல்

"வருமுன் காத்தல் நன்று" என மருத்துவர்கள் அறிவுரை கூறுகின்றனர். நோய் எதிர்ப்பு சக்தி நம்மிடம் அதிகமாக இருந்தால், நம்மை நாம் நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமம் என்னும் மருந்தை இடைவிடாது எடுத்துக்கொள்வதால், நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள முடியும்; எல்லா பௌதிக உந்துதல்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்க முடியும். தொடர்ந்து பிரசாதம் ஏற்பதாலும் ஸ்ரீமத் பாகவத வகுப்புகளைக் கேட்பதாலும் மனதிற்குத் தொல்லை கொடுக்கக்கூடிய அனைத்து விஷயங்களும் விலகிவிடும். பொதுவாக, விறுவிறுப்பான நிகழ்ச்சிகளை ஆத்மா விரும்புகின்றது; ஏனெனில், விறுவிறுப்பும் மகிழ்ச்சியும் நிறைந்த கிருஷ்ண லீலைகளை அனுபவிப்பதே ஆத்மாவின் உண்மையான சுபாவமாகும். ஸ்ரீ கிருஷ்ணர் தனது போட்டிகளில் சில சமயங்களில் தோல்வியடைவதுபோலத் தோன்றினாலும், அவர் ஒருபோதும் தோல்வியடைவதில்லை. அதனால் அவர் *அச்சுத*, தோல்வியடையாதவர் என்று அழைக்கப்படுகிறார். மாறாக, தேவர்களைப் போன்று மதிக்கப்படக்கூடிய நமது 11 கிரிக்கெட் வீரர்களும் தோல்வியடையக் கூடியவர்களே. எனவே, அவர்கள் நமது கடவுள்கள் அல்ல, கிரிக்கெட் நமது மதமும் அல்ல. இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதே நமது உண்மையான மதம்; சச்சிநந்தனே (சச்சிதேவியின் புதல்வரான பகவான் சைதன்யரே) நமது கடவுள்.

*திரு. யுகாவதார தாஸ் அவர்கள், மும்பையில் உள்ள மருத்துவக் கல்லூரியில் இணை பேராசிரியராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை பயிற்சி செய்து வருகிறார்.*

# ஸ்ரீ ஸ்ரீ சிக்ஷாஷ்டகம்

பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவால் எழுதப்பட்ட எட்டு பாடல்கள்

பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு கிருஷ்ண விஞ்ஞானம் குறித்த புத்தகங்களை எழுதும்படி தனது சீடர்களுக்கு உபதேசித்தார், அப்பணியினை அவரது சீடத் தொடரில் வருபவர்கள் இன்றுவரை ஏற்று நடத்தி வருகின்றனர். இடைவிடாத சீடப் பரம்பரையின் காரணத்தினால், பகவான் சைதன்யரால் வழங்கப்பட்ட தத்துவங்களின் விளக்கங்களும் வியாக்கியானங்களும் மிகமிக அதிகமாகவும், உண்மையிலிருந்து பிறழாமலும் கட்டுக்கோப்புடையதாகவும் உள்ளன. பகவான் சைதன்யர் அவரது இளமைக் காலத்தில் பண்டிதர் என்று பிரபலமாக அறியப்பட்டிருப்பினும், அவர் சிக்ஷாஷ்டகம் எனப்படும் எட்டு ஸ்லோகங்களை மட்டுமே விட்டுச் சென்றார். இந்த எட்டு ஸ்லோகங்கள் அவரது திருப்பணியையும் கொள்கைகளையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இந்த உயர்மதிப்புடைய பிரார்த்தனைகளை இங்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

(1)

**சேதோ-தர்பண-மார்ஜனம் பவ-மஹா-தாவாக்னி-நிர்வாபனம்**
**ஷ்ரேய:-கைரவ-சந்த்ரிகா-விதரணம் வித்யா-வதூ-ஜீவனம்**
**ஆனந்தாம்புதி-வர்தனம் ப்ரதி-பதம் பூர்ணாம்ருதாஸ்வாதனம்**
**ஸர்வாத்ம-ஸ்னபனம் பரம் விஜயதே ஸ்ரீ-க்ருஷ்ண-ஸங்கீர்தனம்**

எல்லாப் புகழும் ஸ்ரீ கிருஷ்ண நாம சங்கீர்த்தனத்திற்கே. ஏனெனில், இது காலங்காலமாக நம் இதயத்தில் படிந்துள்ள எல்லா அழுக்கையும் சுத்தப்படுத்தி, கட்டுண்ட வாழ்வில் தொடரும் பிறப்பு, இறப்பு என்னும் தீயை அணைக்கிறது. நிலவு தன் குளிர்ந்த ஒளியினால் எல்லாருக்கும் நன்மையளிப்பதைப் போல, இந்த சங்கீர்த்தன இயக்கம் மனித குலத்திற்கு மாபெரும் வரப்பிரசாதமாகும். இது தெய்வீக ஞானத்திற்கு உயிரூட்டுகிறது, பேரானந்தப் பெருங்கடலை பெருகச் செய்கிறது, எப்பொழுதும் நாம் விரும்பும் அமிர்தத்தை முழுமையாக சுவைக்கச் செய்கிறது.

(2)


**நாம்நாம் அகாரி பஹுதா நிஜ-ஸர்வ-ஷக்திஸ்**
**தத்ரார்பிதா நியமித: ஸ்மரணே ந கால:**
**ஏதாத்ருஷீ தவ க்ருபா பகவன் மமாபி**
**துர்தைவம் ஈத்ருஷம் இஹாஜனி நானுராக:**

எம்பெருமானே, உமது திருநாமம் மட்டுமே அனைத்து ஜீவன்களுக்கும் நன்மை அளிக்கக்கூடியதாகும், இதனால் உமக்கு கிருஷ்ண, கோவிந்த என ஆயிரக்கணக்கான நாமங்கள் உள்ளன. இத்தகு தெய்வீக நாமங்களில் உம்முடைய தெய்வீக சக்திகள் அனைத்தையும் நிரப்பியுள்ளீர். இந்த நாமங்களை ஜெபிப்பதற்கு கடினமான நிபந்தனைகள் ஏதும் இல்லை. உமது திருநாமங்களால் உம்மை அணுகுதல் சுலபம், ஆனால் இத்தகைய நாமங்களில் ருசியற்ற நான் மிகவும் துர்பாக்கியசாலியாக இருக்கிறேன்.

(3)

**த்ருணாத் அபி ஸுனீசேன**
**தரோர் அபி ஸஹிஷ்ணுனா**
**அமானினா மானதேன**
**கீர்தனீய: ஸதா ஹரி:**

பகவானின் திருநாமத்தை உச்சரிக்கும் ஒருவர் மிகவும் பணிவான மனநிலையில் இருக்க வேண்டும், தெருவில் உள்ள புல்லைவிடப் பணிவாகவும், மரத்தைவிடப் பொறுமையாகவும், தனக்கென்று எந்த மரியாதையையும் எதிர்பார்க்காமல், பிறருக்கு எல்லா மரியாதையையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். இத்தகு மனோபாவத்தில் ஒருவர் ஹரியின் திருநாமத்தை இடைவிடாமல் கீர்த்தனம் செய்ய முடியும்.



(4)

ந தனம் ந ஜனம் ந ஸுந்தரீம்
கவிதாம் வா ஜகத்-ஈஷ காமயே
மம ஜன்மனி ஜன்மனீஷ்வரே
பவதாத் பக்திர் அஹைதுகீ த்வயி

எல்லாம் வல்ல பெருமானே, பொருள் வேண்டேன், என்னைப் பின்பற்றுவோரும் வேண்டேன், அழகிய பெண்களும் வேண்டேன்; யான் வேண்டுவதெல்லாம் ஒவ்வொரு பிறவியிலும் உமக்குக் களங்கமற்ற பக்தித் தொண்டாற்ற வேண்டும் என்பது மட்டுமே.

(5)

அயி நந்த-தனுஜ கிங்கரம்
பதிதம் மாம் விஷமே பவாம்புதௌ
க்ருபயா தவ பாத-பங்கஜ-
ஸ்தித-தூலீ-ஸத்ருஷம் விசிந்தய

நந்த மகாராஜரின் புதல்வரே, யான் உமது நிரந்தர சேவகன், இருப்பினும் எவ்வாறோ பிறப்பு இறப்பின் கடலில் வீழ்ந்துவிட்டேன். தயவுசெய்து இந்த மரணக் கடலிலிருந்து என்னை கைத்தூக்கி உமது தாமரைத் திருவடிகளில் ஒரு தூசியாக வைத்துக் கொள்வீராக.

(6)

நயனம் கலத்-அஷ்ரு-தாரயா
வதனம் கத்கத-ருத்தயா கிரா
புலகைர் நிசிதம் வபு: கதா
தவ-நாம-க்ரஹணே பவிஷ்யதி

எம்பெருமானே, உமது திருநாமத்தை உச்சரிக்கும்போது, எனது கண்கள் ஆனந்தக் கண்ணீரால் அலங்கரிக்கப்படுவது எப்போது? நா தழுதழுப்பது எப்போது? உடலெங்கும் மயிர்சிலிர்ப்பது எப்போது?

(7)

யுகாயிதம் நிமேஷேண
சக்ஷுஷா ப்ராவ்ருஷாயிதம்
ஷூன்யாயிதம் ஜகத் ஸர்வம்
கோவிந்த-விரஹேண மே

ஓ கோவிந்தா! உம்முடைய பிரிவு ஒரு க்ஷணம் என்றாலும் அதனை நான் யுகங்களாக உணர்கிறேன். கண்களில் கண்ணீர் பெருகி மழை போல் பொழிகிறது. தாங்களின்றி இந்த உலகத்தையே நான் சூன்யமாகக் கருதுகிறேன்.

(8)

ஆஷ்லிஷ்ய வா பாத-ரதாம் பினஷ்டு மாம்
அதர்ஷனாம் மர்ம-ஹதாம் கரோது வா
யதா ததா வா விததாது லம்படோ
மத்-ப்ராண-நாதஸ் து ஸ ஏவ நாபர:

கிருஷ்ணர் என்னை முரட்டுத்தனமாக அணைத்துக் கொண்டாலும், என் முன் தோன்றாது என் இதயத்தை நோகச் செய்தாலும், அவரே என் பிரபுவாவார், அவரைத் தவிர வேறு எவரையும் நான் என் இறைவனாக அறியேன். என்னிடம் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்துகொள்ள அவருக்கு பூரண சுதந்திரம் உண்டு, இருப்பினும் அவரே எனது வணக்கத்திற்குரிய இறைவனாவார், இதில் எந்த நிபந்தனையும் இல்லை.


# Wanted

## Male DTP Operator (for Bhaktivedanta Book Trust)

**Softwares to be known:** Ms-Office, Adobe Indesign (or at least Pagemaker), Adobe Photoshop. Knowledge of Coral draw will be an added advantage.

**Typing skills:** Both English & Tamil (atleast one should be known with the interest to learn the other in a short period)

**Age limit:** Preferably below 25, and maximum of 30 years

**Experience:** Atleast basic experience in DTP or related works

**Job location:** Perambur, Chennai

Devotionally inclined candidates fulfilling the above requirements can send their resume to our Subscription office before 25th March, 2011 along with expected salary.

# ஸ்ரீதாம் மாயாபூர்

## பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கலியுக அவதாரமான, பரம கருண, சச்சிநந்தன கௌரஹரி என்று அழைக்கப்படும் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத் திருத்தலம்

வழங்கியவர்: திரு. விஜய வேங்கடேஷ தாஸ்

எப்பொழுதெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் மேலோங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் பக்தர்களைக் காத்து கொடியவர்களை அழித்து மீண்டும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக, ஒவ்வொரு யுகத்திலும் தான் அவதரிப்பதாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் (4.7-8) கூறியுள்ளார். சத்ய யுகத்தில் வெண்மை நிறத்திலும், திரேதா யுகத்தில் செம்மை நிறத்திலும், துவாபர யுகத்தில் கருமை நிறத்திலும், கலி யுகத்தில் மஞ்சள் (பொன்) நிறத்திலும் பகவான் அவதரிப்பதாக ஸ்ரீமத் பாகவதத்தில் (11.5.19-32) கூறப்பட்டுள்ளது. கலி யுகத்தில் தோன்றும் பகவானுடைய அவதாரத்தைப் பற்றியும், அவர் அவதரிக்கும் இடமான நவத்வீபத்தைப் பற்றியும், வேதங்கள், உபநிஷத்துகள், புராணங்கள், தந்திர சாஸ்திரங்கள் போன்றவற்றில் விரிவான விளக்கங்களைக் காணலாம்.

### சில வேத சான்றுகள்

பவிஷ்யே கௌர-ரூபேண
சசி-கர்பே புரந்தராத்
ஸவர்னதி-தீரம் அஸ்தாய
நவத்வீபே ஜனாஷ்ரயே
தத்ர த்விஜ-குலம் ப்ராப்தோ
பவிஷ்யாமி ஜனாலயே
பக்தி-யோக-ப்ரதானாய
லோகஸ்யானுக்ரஹாய ச
ஸன்ன்யாஸ-ரூபம் ஆஸ்தாய
க்ருஷ்ண-சைதன்ய-நாம-த்ருக்

“நவத்வீப நகரில் கங்கை நதிக் கரையில் ஓர் அந்தணர் குடும்பத்தில் புரந்தர மிஸ்ராவின் மனைவியான சச்சிதேவியின் கர்ப்பத்திலிருந்து பொன் நிறத்தில் நான் அவதரிப்பேன். பின் சந்நியாஸ ஆஸ்ரமத்தைத் தழுவி பக்தித் தொண்டில் அனைவரையும் ஈடுபடுத்தி கருணை வழங்குவேன். மேலும் நான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்ற நாமத்தை ஏற்பேன்.” (வாயு புராணம்)

அஹம் பூர்ணோ பவிஷ்யாமி
யுக சந்த்யௌ விசேஷத:
மாயாபூரே நவத்வீபே
பவிஷ்யாமி சசி ஷுத:

“கலியுகத்தின் போது நவத்வீபத்தில் உள்ள மாயாபூரில் சச்சிதேவியின் மகனாக நான் அவதரிப்பேன்.” (கருட புராணம்)



நாம சங்கீர்த்தனம் செய்தபடி தனது சகாக்களுடன் மாயாபூரில் பவனி வரும் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு

மேலும், நவத்வீபத்தின் பெருமையை கீழ்கண்ட வேத சான்றுகளின்படியும் அறியலாம்.

குருக்ஷேத்ரம் க்ருதே தீர்த்தம்
த்ரேதாயாம் புஷ்கரம் ஸ்ம்ரிதம்
த்வாபரே நைமிஷாரண்யம்
நவ கண்டம் கலௌ கில

"கிருத யுகத்தில் குருக்ஷேத்திரமும், திரேதா யுகத்தில் புஷ்கரமும், துவாபர யுகத்தில் நைமிஷாரண்யமும், கலியுகத்தில் ஒன்பது தீவுகளையுடைய நவத்வீபமும் புனிதத் தலங்களாக விளங்கும்." (முக்தி ஸங்கலினி தந்த்ரம்)

எனவே, நவத்வீபத்தைப் பற்றியும் மாயாபூரைப் பற்றியும் இக்கட்டுரையில் சற்று விரிவாகக் காண்போம்.

நவத்வீபம், தற்போதைய மேற்குவங்க மாநிலத்தின் தலைநகரான கொல்கத்தாவிற்கு வடக்கே 130 கி.மீ. தொலைவில் கங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது. நவத்வீபத்தின் மையத்தில் மாயாபூர் வீற்றுள்ளது. சுமார் 524 வருடங்களுக்கு முன்பாக பகவானின் கலியுக அவதாரமான ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு, ஜகன்னாத (புரந்தர) மிஸ்ராவுக்கும் சச்சிதேவிக்கும் மகனாக 1486ஆம் வருடம் பிப்ரவரி 27ஆம் தேதி சந்திர கிரகணத்தின் மாலை வேளையில் மாயாபூரில் அவதரித்தார்.

## அவதார நோக்கம்

கலி யுகம் தொடங்கியவுடன் மக்கள் வேதங்களில் நம்பிக்கையற்றவர்களாக, நாத்திகர்களாக, வேதங்களுக்குத் தவறான அர்த்தம் கற்பிப்பவர்களாக, இவ்வுலக வாழ்க்கையே உண்மை என்று கருதுபவர்களாக, வேதங்களைத் தவறாகப் பயன்படுத்தி யாகங்கள் என்ற பெயரில் கொடிய மிருகவதைகளை ஆதரிப்பவர்களாக, கிருஷ்ணரிடம் எவ்வாறு சரணடைவது என்பதை அறியாதவர்களாக, பல போலியான வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தியவர்களாக, எப்பொழுதும் பயத்துடனும் நிம்மதியின்றியும் வாழ்ந்து கொண்டிருந்தனர். வேத இலக்கியங்களில், குறிப்பாக, பிரஹன் நாரதீய புராணத்தில், கலி யுகத்தின் எல்லாத் தாக்கங்களிலிருந்தும் விடுபட்டு நிம்மதியான, ஆனந்தமான வாழ்வை அடைய ஒரே வழி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திவ்ய நாமங்களை உச்சரிப்பதே என்று அறுதியிட்டு கூறப்பட்டுள்ளது. எனவே, யுகந்தோறும் அவதரிப்பதாக பகவத் கீதையில் கூறும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், தாமே நேரில் தன் பக்தனின் உருவில் அவதாரமாகத் தோன்றி, தன்னிடம் சரணடைவது எவ்வாறு என்பதையும் கலியுக தர்மமான ஸ்ரீ கிருஷ்ண நாம சங்கீர்த்தனத்தையும் கற்பித்தார். இதைத் தவிர முந்தைய யுகமான துவாபர யுகத்தில் தன் திருவுள்ளத்திலிருந்த மூன்று இரகசியங்களைப் பூர்த்தி செய்வதற்காகவும், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவாக அவதரித்தார். இவ்விஷயங்களை ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதத்தில் விரிவாகக் காணலாம்.

## ஸ்ரீ நவத்வீபம் தோன்றிய வரலாறு

ஸ்ரீ நவத்வீபம் தோன்றிய வரலாற்றினை அனந்த சம்ஹிதையில் சிவபெருமான் பார்வதி தேவியிடம் விவரித்துள்ளார். ஒருசமயம் விருந்தாவனத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது லீலைகளில் ஈடுபட்டிருந்தபோது, அவரைக் கவர விரும்பிய ஸ்ரீமதி ராதாராணி, கங்கைக்கும் யமுனைக்கும் இடையில், பலவிதமான சிறந்த மரங்களும், வண்டுகளும், தேனீக்களும், மணம் வீசும் மல்லிகை, முல்லை, மாலதி, துளசி போன்ற மலர்ச் செடிகொடிகளும், அழகிய மான் மயில்கள் விளையாடும் நந்தவனமும், பூங்குடில்களும் அமையப்பெற்ற ஓர் அழகிய இடத்தை உருவாக்கினாள். அவ்விடத்தை மிகவும் ரசித்த ஸ்ரீ கிருஷ்ணர், "இவ்விடம் 'நவ விருந்தாவனம்' (புதிய விருந்தாவனம்) என்றும், தீவு போல இருப்பதால் 'நவத்வீபம்' என்றும் புத்திமான்களால் அறியப்படும். இவ்விடத்தைவிட்டு நான் என்றும் நீங்காமல் நிரந்தரமாக வசிப்பேன். எவரெல்லாம் இவ்விடத்தில் நம்மை பூஜிக்கிறார்களோ அவர்கள் என்மீதான பிரேம பக்தியை அடைவர். யாரொருவர் இவ்விடத்திற்கு ஒரு முறை வந்து செல்கின்றாரோ அவர் எல்லா புனித தலங்களுக்கும் சென்ற பயனை அடைவது மட்டுமின்றி, இறுதியில் மிகுந்த பிரேமையுடன் நம்மை வந்தடைவார்," என்று ராதையிடம் கூறினார். மேலும், "நவத்வீபம் தோன்றிய வரலாற்றை காலை எழுந்தவுடன் படிப்பவர்கள்,



மாயாபூரில் பாயும் புனித நதியான கங்கையின் அழகிய தோற்றம் (பின்புறம் தெரிவது, ஸ்ரீல பிரபுபாதரின் புஷ்ப சமாதி)


எல்லா பாவங்களையும் தொலைத்து, பரமபக்தியை அடைவது திண்ணம்,'' என்று மிகுந்த பரவசத்துடனும் ஆனந்தக் கண்ணீருடனும் சிவபெருமான் பார்வதியிடம் எடுத்துரைத்தார்.

வைஷ்ணவ தந்திர சாஸ்திரத்தில் சிவபெருமான் பார்வதியிடம் கூறியதாவது: ''அன்பிற்குரியவளே, நவத்வீபத்திலுள்ள கங்கையின் தெற்கில், கலி யுகத்தின் கொடிய பாவங்களை அழிக்க பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றுவார். அவர் பால்குன மாத பௌர்ணமியில் புரந்தர (ஜகன்னாத) மிஸ்ராவின் இல்லத்தில் சச்சி மாதாவிற்கு பொன்னிற மேனியுடன் மகனாக அவதரிப்பார். இதனால் அவருக்கு கௌரங்கர் என்ற திருப்பெயரும் உண்டு. கலி யுகத்தில் நவத்வீபத்தில் தோன்றும் கௌரங்கர், தன் கழுத்தில் அன்றலர்ந்த மலர் மாலையுடன், கன்னத்தை அலங்கரிக்கும் தங்கக் காதணிகளை அணிந்து, புஜங்களில் அழகிய மணிகளால் ஆன காப்புகளை அணிந்து, எல்லா பாவங்களையும் போக்கும் ஹரி நாமத்தை எல்லோருக்கும் வாரி வழங்குவார். அவ்வழகிய கௌர சுந்தரனை நான் வணங்குகிறேன்.

''தாமரையின் எட்டு இதழ்கள் விரிந்த தோற்றத்தில் காணப்படும் இந்த நவத்வீபம் தூய்மையிலும் தூய்மையானது. கோடிக்கணக்கான சந்திரனின் குளிர்ச்சியையும் தாண்டி மனதிற்கு குளிர்ச்சியுண்டாக்குவது. கோடி சூரிய பிரகாசத்தை விட ஒளி பொருந்தியது. இப்படிப்பட்ட இந்த நவத்வீபம் என் கண் முன்னே தோன்றுவதாக.'' (பிருஹத் பிரம்ம யமல தந்த்ரம்)

## நவத்வீபத்தின் அமைப்பு

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு லீலைகள் புரிந்த காலத்தில், நவத்வீபமானது (*நவ*—ஒன்பது; *த்வீபம்*—தீவுகள்) ஒன்பது தீவுகளாலும், அவற்றைச் சுற்றிப் பாய்ந்தோடிய பலவகை ஆறுகளாலும் நன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நான்கு தீவுகள் கங்கையின் கிழக்கிலும், ஐந்து தீவுகள் கங்கைக்கு மேற்கிலும் அமைந்திருந்தன.




*கிழக்கில்*—அந்தரத்வீபம், சீமந்தத்வீபம், கோத்ருமத்வீபம் மற்றும் மத்யத்வீபம்

*மேற்கில்*—கோலத்வீபம், ரிதுத்வீபம், ஜாஹ்னுத்வீபம், மோதத்ருமத்வீபம் மற்றும் ருத்ரத்வீபம்

இத்தீவுகள் முறையே ஆத்ம நிவேதனம், ஸ்ரவனம், கீர்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம் என ஒன்பது வித பக்தித் தொண்டுகளைக் குறிப்பவை.

இந்த ஒன்பது தீவுகளின் அமைப்பு , எட்டு இதழ்களைக் கொண்ட தாமரையையும் அதன் நடுவே விளங்கும் மகரந்தத்தையும் ஒத்ததாகும். நவத்வீபத்தின் மையத்தில் இருக்கும் அந்தரத்வீபம் என்னும் தீவில்தான் மாயாபூர் அமைந்துள்ளது. மாயாபூரின் மத்தியில் யோகபீடம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு அவதரித்த இடம் உள்ளது. இதுவே நவத்வீபத்தின் மையப் பகுதியாகும். சூரியனைப் போன்ற அந்தரத்வீபத்தின் பெருமானை உலகாயதவாதிகளின் கண்களிலிருந்து மாயை மறைத்து விடுவதால், இவ்விடம் மாயாபூர் என்று பெயர் பெற்றது.

மதுரா, அயோத்தி, ஹரித்வார், காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை ஆகிய ஏழு புனித யாத்திரை தலங்களும் நவத்வீபத்தினுள் அடங்கும். நவத்வீபத்தில் விருந்தாவனத்தின் பன்னிரண்டு காடுகளும் அமைந்துள்ளன. நான்கு யுகங்களின், பகவானின் அவதாரங்கள் இங்கு எப்போதும் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளனர். பிரம்மா, ருத்திரன், இந்திரன், பார்வதி போன்ற தேவர்களும், மிகச்சிறந்த ரிஷிகளும், முனிவர்களும், ஆறு கோஸ்வாமிகளும் இங்கு தவங்கள் புரிந்துள்ளனர். வேத சாஸ்திரங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நான்கு சம்பிரதாய ஆச்சாரியர்களான இராமானுஜர், மத்வர், நிம்பார்கர், விஷ்ணு ஸ்வாமி ஆகியோர் இங்கு வந்து ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் திவ்ய தரிசனத்தையும் ஆசிகளையும் அடைந்துள்ளனர். முந்தைய ஆச்சாரியர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரும் இந்த நவத்வீபத்தையே தன்னுடைய வழிபாட்டிற்குரிய தலமாக ஏற்றுக் கொண்டார்.

யாரொருவர் ஒரு முறை மாயாபூருக்கு விஜயம் செய்கிறார்களோ அவர் மிக சுலபமாக மாயையின் பந்தத்திலிருந்து விடுபடுவார். யாரொருவர் மாயாபூரின் வீதிகளில் பாதயாத்திரை செய்கிறார்களோ அவர் மாயையின் ஆதிக்கத்திலிருந்தும் பிறவி சக்கரத்திலிருந்தும் விடுபடுகிறார்.

## மாயாபூர் கண்டுபிடிக்கப்படுதல்

இவ்வழகிய மாயாபூர் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் காலத்திற்குப் பின் கங்கை நதியால் மூழ்கடிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏழாவது கோஸ்வாமி என்றழைக்கப்படும் ஸ்ரீல பக்திவினோத தாகூரின் அரும் பெரும் முயற்சியால் பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் அவதார இடமான யோகபீடம் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்

அந்த அவதார இடத்தைக் கண்டுபிடிக்க கடுமையான முயற்சிகளை செய்து கொண்டிருந்தார்.

1887ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் ஓர் இரவு நேரத்தில் நவத்வீபத்திலுள்ள ராணி தர்மசாலாவின் மாடியில் அமர்ந்து ஜப மாலையில் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். அப்போது கங்கையைத் தாண்டி வடக்கில் ஒரு பேரொளி எழுவதைக் கண்டார். பின்னர் அவ்விடத்தை சென்று பார்வையிட்ட ஸ்ரீல பக்தி வினோத தாகூர், அந்த இடத்தில் ஏழு மண்குவியல்கள் இருப்பதைக் கண்டார். அங்கு என்ன பயிர் செய்தாலும் எதை விதைத்தாலும் துளசிச் செடியாக மாறி வளர்வதாகவும், இரவு நேரங்களில் பல அழகிய தேவர்களைப் போன்றோர் ஆடிப் பாடிக் கொண்டிருப்பதாகவும், பல்வேறு இதர வினோதங்கள் நடைபெறுவதாகவும், அதனால் இந்த இடத்தைத் தாங்கள் மிகவும் மதிப்பதாகவும் ஸ்ரீல பக்திவினோத தாகூரிடம் அங்குக் குடியிருந்த முகமதியர்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீல பக்திவினோத தாகூர் பல்வேறு சாதுக்களிடம் இதைப் பற்றி வினவினார். பின்னர் தன் குருவான, 142 வயதான, ஸ்ரீல ஜகந்நாத தாஸ பாபாஜியை ஒரு கூடையில் அமர்த்தி தன் தலையில் தூக்கிக்கொண்டுவந்தார். அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவுடன் ஸ்ரீல ஜகந்நாத தாஸ பாபாஜி, தான் அமர்ந்திருந்த கூடையிலிருந்து குதித்து, பரவசத்துடன் ஆடிப் பாடி, இந்த இடம்தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் உண்மையான அவதார இடம் என்பதை உணர்த்தினார். ஸ்ரீல பக்திவினோத தாகூர், தான் நெடுங்காலமாக பெருமுயற்சி செய்து தேடிக்கொண்டிருந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் உண்மையான அவதார இடம், பகவானின் கருணையால் காட்டப்பட்டதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைந்தார். பின்னர், பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத்தலமான யோகபீடத்தில் ஓர் அழகிய கோவிலை எழுப்ப வேண்டும் என்னும் தனது நீண்ட நாளைய கனவை நிறைவேற்ற, ஸ்ரீல பக்திவினோத தாகூர், 1893இல் தன்னந்தனியாக ஒவ்வோர் இல்லத்திற்கும் சென்று நிதி திரட்டி, அழகிய திருக்கோவிலை அமைத்தார்.

இத்திவ்ய திருத்தலத்தில் (நவத்வீபத்தில்) ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு லீலைகள் நிகழ்த்திய இடங்கள் ஏராளம், ஏராளம்... அவை முழுவதையும் இங்கு விவரிப்பது இயலாத காரியம். எனவே, மாயாபூரில் அமைந்துள்ள சில முக்கியமான இடங்களை மட்டும் இங்கு நாம் காண்போம்.

## யோகபீடம்

யோக என்றால் இணைத்தல் என்று பொருள். யோக பீடம் என்றால், பகவான் தன் அவதார லீலைகளுக்காக பூவுலகில் பிரவேசிக்கும் இடம் என்பதாகும். இதுவே ஜகந்நாத மிஸ்ரரின் இல்லமாகும். யோகபீடத்தினுள் நுழையும்போது வலப்பக்கத்தில் ஸ்ரீல பக்திவினோத தாகூரின் சந்நிதியை தரிசிக்கலாம். இடப்பக்கத்தில் கோவிலின் நூறு அடி உயர கோபுரத்தின் கீழ் மூன்று பூஜை மண்டபங்களைக் காணலாம். இடது மண்டபத்தில் ஸ்ரீ ஸ்ரீ ராதா மாதவர், ஸ்ரீ கௌரங்கர், மற்றும் ஸ்ரீ ஜகந்நாதரை தரிசிக்கலாம். கௌர நாராயணர் (சைதன்ய மஹாபிரபு), விஷ்ணுபிரியா, லக்ஷ்மிபிரியா, மற்றும் 1934இல் கோவில் கட்டுவதற்காக பூமியைத் தோண்டியபோது கண்டெடுக்கப்பட்ட அதோக்ஷஜ விஷ்ணுவின் விக்ரஹத்தையும் மைய மண்டபத்தில் தரிசிக்கலாம். வலது மண்டபத்தில் பஞ்ச தத்வ, ஜகந்நாதர் விக்ரஹங்களையும் தரிசிக்கலாம். ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு இவ்வுலகில் தோன்றியபோது ஒரு வேப்ப மரத்தடியில் அவதரித்தார்.





பகவான் சைதன்யர் அவதரித்த புனித ஸ்தலத்திலுள்ள யோக பீட கோவிலும் (இடது) அங்குள்ள வேப்ப மரமும் (வலது)

## மார்ச் 19, கௌர பூர்ணிமா, பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத் திருநாள்

இதனால் அவர் தனது குழந்தைப் பருவத்தில் நிமாய் என்று அறியப்பட்டார். அந்த வேப்ப மரத்தையும் அதனருகில் ஒரு சிறு வீட்டையும் இத்திருக்கோவிலின் வலப்புறத்தில் காணலாம். வீட்டினுள் நிமாயை மடியில் கிடத்தியவாறு இருக்கும் சச்சி தேவியையும் ஜகந்நாத மிஸ்ராவையும் தரிசிக்கலாம். வீட்டின் பின்புறத்தில், கோபீஸ்வர சிவன், க்ஷேத்திரபால சிவன் என்னும் திருநாமங்களைக் கொண்ட சிறியதும் பெரியதுமான இரு சிவலிங்கங்கள் உள்ளன. மாயாபூரில் தங்கினாலும் பாதயாத்திரை செய்வதானாலும், இந்த சிவபெருமானை முதலில் வழிபட்டு தொடங்குவது உசிதம். கோவிலின் முன்பு ஒரு பெரிய சங்கீர்த்தன கூடமும், அதன் பின்னால், லக்ஷ்மி நரசிம்மர், கௌர கதாதர் சந்நிதிகளும் உள்ளன. கோவிலின் தெற்கே கௌர குண்டம் என்ற திருக்குளத்தையும் காணலாம்.

### ஸ்ரீவாஸ் அங்கன் (ஸ்ரீவாஸ பண்டிதருடைய இல்லம்)

இங்குதான் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தன் சங்கீர்த்தன இயக்கத்தை ஆரம்பித்தார். நவத்வீபத்தின் ராஸ ஸ்தாலி என்றறியப்படும் இவ்விடத்தில், ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ நித்யானந்தர், மற்றும் இதர பக்தர்களும் ஹரி நாம சங்கீர்த்தனத்தில் மிகுந்த பரவசத்துடன் ஆடிப் பாடுவர். இதனால் வெறுப்படைந்த சிலர், முகமதிய அரசரிடம் முறையிட, அவர் சங்கீர்த்தனத்தில் பயன்படுத்தப்பட்ட கோல் என்றழைக்கப்படும் மிருதங்கத்தை பறித்து கீழே போட்டு உடைத்தார். அந்த கோல் இன்றும் பூஜை மண்டபத்தில் இருப்பதை நாம் காண முடியும். இதனால் இந்த கோவிலுக்கு கோல பாங்க-டாங்கா என்ற பெயரும் உண்டு. இது யோகபீடத்திலிருந்து வடக்கில் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

### ஸ்ரீ சைதன்ய மடம்

இந்த மடம் 1918ஆம் ஆண்டு ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரால் நிர்மாணிக்கப்பட்டது. பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு சிறு வயதில் பல நாடகங்களை இங்கு அரங்கேற்றுவதுண்டு. இது வ்ரஜ பட்டிணம் என்றும் அழைக்கப்பட்டது. ஸ்ரீவாஸ அங்கனிலிருந்து அரை கிலோமீட்டர் தொலைவில் இஃது அமைந்துள்ளது. முதலில் ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரின் சமாதியை தரிசிக்கலாம். உள்ளே முக்கிய சந்நிதியாக ஸ்ரீ ஸ்ரீ கௌரங்க-காந்தர்விகா-கிரிதாரி திருவிக்ரஹங்களைக் காணலாம். இந்த சந்நிதியை சுற்றி நான்கு மூலைகளிலும் நான்கு சம்பிரதாய ஆச்சாரியார்களின் மூர்த்திகளை தரிசிக்கலாம். மேலும், ராதாகுண்டம், சியாம குண்டம், கிரி கோவர்தனம், கௌரகிஷோர தாஸ பாபாஜி சமாதி போன்ற பல சிறப்பு வாய்ந்த இடங்களையும் தரிசிக்கலாம்.

### சிறப்பு மிக்க படித்துறைகள்

படித்துறையை காட் (ghat) என்று அழைப்பர். கங்கையால் சூழப்பட்டுள்ளதால், மாயாபூரில் பல்வேறு சிறப்புமிக்க படித்துறைகள் உண்டு. சிவபெருமான் எப்போதும் வீற்றிருக்கும் விருத்த சிவ காட், நிமாய் தனது பால்ய லீலைகளை அரங்கேற்றிய மஹாபிரபு காட், மிகப்பெரிய பாவிகளாக இருந்து மஹாபிரபுவால் விடுவிக்கப்பட்ட ஜகாய், மதாயினால் கட்டப்பட்ட ஜகாய் மதாய் காட், மஹாபிரபு கேசவ காஷ்மீரியைத் தோற்கடித்த பாரகோணா காட், என பல்வேறு படித்துறைகள் உள்ளன.

### மாயாபூர் சந்திரோதய மந்திர்


பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கலியுக அவதாரமான ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு, நவத்வீபத்தின் ஒன்பது

(27ஆம் பக்கம் பார்க்க)



*ஸ்ரீ சைதன்ய மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸ்ரீ கௌரங்க-காந்தர்விகா-கிரிதாரி விக்ரஹங்கள்*


மருத்துவரின் கத்தி
ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அருளிய உபதேச கதை
வரைபட உதவி: www.iskcondesiretree.com
அமர் என்னும் சிறுவன் தனது முதுகில் இருந்த கொப்பளத்தின் வலியினால் பெரிதும் அவதிப்பட்டான்.
அவனுடைய பரிதாப நிலையைப் பார்த்த கிராமத்தினர் அவனைச் சூழ்ந்துகொண்டு அறிவுரை கூறத் தொடங்கினர்.
குழந்தாய், இந்த விசிறியால் உனது வலியை நான் விடுவிக்கிறேன்.
என் வாயிலிருந்து குளிர்ந்த காற்றை ஊதி நான் உன்னை விடுவிக்கிறேன்.
தாங்கவியலாத அவனது வலியைப் போக்க ஏதேனும் மயக்க மருந்து கொடுக்கலாம்.
இவன் மிகவும் வேதனைப்படு கிறான்! வலியிலிருந்து நிரந்தரமாக விடுவிக்க இவனைக் கொன்று விடலாம்.
இத்தகு அறிவுரைகளால் பொறுமையிழந்த அறிவாளி தந்தை, உடனடியாக கைதேர்ந்த மருத்துவரை வரவழைத்தார்.
சிறிய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.
அமரின் தாய், பாட்டி என அங்கிருந்த அனைவரும் அழத் தொடங்கினர்.
மகனே!




# கருத்து

இந்த மருத்துவரைப் போலவே, உண்மையான ஆன்மீக குருமார்களும் சாதுக்களும், சில நேரங்களில் நமது மனதிற்குப் பிடிக்காத தடைகளையும் போதனைகளையும் வழங்கி, பிடிவாதமான நமது மனதின் முடிச்சுக்களைத் துண்டாக்குவார்கள். ஆனால் துன்பப்படும் உயிர்வாழிகள், அத்தகு தடைகளையும் போதனைகளையும் ஏற்பதற்குப் பதிலாக, அந்த சாதுக்களை தங்களது எதிரிகள் என்றும் கருணையற்றவர்கள் என்றும் கடினமான சொற்களால் சாடுவார்கள். அவர்களின் நண்பர்களும் உறவினர்களும், வெளிப்படையான வலியையும் சஞ்சலத்தையும் தவிர்க்க இப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சையை எதிர்ப்பார்கள். சில போலியான நண்பர்களோ துன்பத்தைப் போக்குவதற்கு மாயாவாதம் என்ற பெயரில் தற்கொலை செய்துக்கொள்ளக்கூட அறிவுரை கூறுவார்கள். இதுபோன்ற வழிகள் நிரந்தரமான இன்பத்தைத் தராது. சாதுக்களின் போதனைகளை நேர்மையான முறையில் பின்பற்றி, தங்களது உபயோகமற்ற உலகப் பற்றுதல்களிலிருந்து எப்பொழுது உயிர்வாழிகள் விடுபடுகிறார்களோ, அப்பொழுது அவர்கள் தங்களது உண்மை நிலையை உணருவார்கள். அந்த உணர்வு பக்தித் தொண்டில் நுழைவதற்கு வழிவகுக்கும்; பக்தித் தொண்டு மட்டுமே நிரந்தரமான ஆனந்தத்தையும் மன அமைதியையும் பெறுவதற்கான வழியாகும்.




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் இரண்டு அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **மூன்றாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# கர்ம யோகம்

## இரண்டாம் அத்தியாயத்தின் சுருக்கம்

சோகத்தால் மூழ்கிய அர்ஜுனனிடம், இக்களங்கங்கள் எங்கிருந்து வந்தன என்றும், பலவீனத்தைக் கைவிட்டுப் போரிடும்படியும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துரைத்தார். இருப்பினும், பாசத்தால் மூழ்கியிருந்த அர்ஜுனன், என்ன செய்வது என்பதில் குழம்பியிருப்பதாகவும் தனக்குத் தக்க அறிவுரை கூறும்படியும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சீடனாக சரணடைந்தான். உடனே குருவின் ஸ்தானத்தை ஏற்ற பகவான், தனது சீடனின் நிலையினைக் கண்டித்தார். அதனைத் தொடர்ந்து ஆத்ம ஞானம், ஸ்வர்க லோகத்திற்கு ஏற்றம் பெற உதவும் கர்ம காண்டம், பாவமின்றி செயல்பட உதவும் புத்தி யோகம் ஆகியவற்றை விளக்கிய ஸ்ரீ கிருஷ்ணர், முந்தைய அத்தியாயத்தில் அர்ஜுனன் எழுப்பிய எல்லா வாதங்களையும் முறியடித்தார். புத்தி யோகத்தில் நிலைபெற்றவனின் அறிகுறிகளைப் பற்றிய அர்ஜுனனின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

கர்ம யோகம் எனப்படும் மூன்றாம் அத்தியாயத்திற்குள் நுழைவதற்கு முன்பு, அனைத்து யோக முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தல் மிகவும் உதவியாக அமையும். யோகத்தின் ஏணிப்படிகள் என்னும் (அடுத்த பக்கத்தில் கொடுக்கப் பட்டுள்ள) வரைபடத்தின் உதவியுடன் யோக முறைகளை நாம் ஒப்பிடலாம்.

## யோகத்தின் ஏணிப்படிகள்

யோகம் என்றால் "இணைத்தல்" என்று பொருள். ஜடவுலகில் கட்டுண்டு வசிக்கும் ஜீவனை முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணருடன் இணைப்பதற்கான வழிமுறையே யோகம் எனப்படும். செய்யும் தொழிலைக் கொண்டு (கர்மத்தைக் கொண்டு) இணைத்தல், "கர்ம யோகம்" என்றும், ஞானத்தைக் கொண்டு இணைத்தல் "ஞான யோகம்" என்றும், எட்டு அங்கங்களைக் கொண்ட பயிற்சியினால் இணைத்தல் "அஷ்டாங்க யோகம்" (அல்லது தியான யோகம்) என்றும், பக்தியைக் கொண்டு இணைத்தல் "பக்தி யோகம்" என்றும் அறியப்படுகின்றன.

எல்லா யோக முறைகளும் ஒரே பலனைக் கொடுப்பவை என்னும் அபிப்பிராயம் மக்கள் மனதில் பரவலாக உள்ளது; ஆனால் அஃது உண்மையல்ல. எல்லா யோக முறைகளுமே இறைவனுடன் உறவு கொள்வதற்கானவை என்றபோதிலும், உண்மையில் அவை இறைவனை அணுகுவதற்கான பாதையில் பல்வேறு படிக்கட்டுகளைப் போன்றவையே. எல்லா யோகிகளிலும் பக்தி யோகியே சிறந்தவன் என்பது கீதையில் (6.47) தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த ஏணிப்படியின் முதல் நிலை "கர்ம காண்டம்" என்று அழைக்கப்படுகிறது. முற்றிலும் மிருகத்தைப் போல வாழும் மனிதன், அதிலிருந்து சற்று உயர்வு பெற்று, மனிதர்களைக் காட்டிலும் உயர் சக்தி உண்டு என்பதை அங்கீகரித்து, வேதங்களில் கூறப்பட்டுள்ளபடி பல்வேறு தேவர்களை வழிபட்டு, இவ்வுலகில் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் மரணத்திற்குப் பின்னர் ஸ்வர்கத்திற்குச்சென்று மகிழ்ச்சியாக இருப்பதற்கும் உதவக்கூடிய வழிமுறை "கர்ம காண்டம்" எனப்படுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே (விஷ்ணுவே) எல்லா தேவர்களுக்கும் ஆதியானவர் என்பதையும் முழுமுதற் கடவுள் என்பதையும் இவர்கள் அறியாத காரணத்தினால், பரம்பொருளுக்கும் இவர்களுக்கும் நேரடித் தொடர்பு (யோகம்) கிடையாது. இருப்பினும், இவர்கள் வேதச் சடங்குகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதால், காலப்போக்கில் பகவான் விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்பதை உணர்ந்து அவரை வழிபடத் தொடங்கும்போது, கர்ம யோகத்தினுள் நுழைகின்றனர்.

கர்ம யோகத்தின்படி, வர்ணாஷ்ரம தர்மத்தின் குறிக்கோள் விஷ்ணுவைத் திருப்திப்படுத்துவதே என்பதை உணரும் சாதகன் (பயிற்சியாளன்), தனது கடமைகளை விஷ்ணுவிற்காக நிறை வேற்றுகின்றான். ஜடவுலக ஆசைகளுடன் பலனை எதிர்பார்த்து கர்ம யோகத்தில் ஈடுபடும்போது, அது "ஸகாம கர்ம யோகம்" என்றும், பலனை எதிர்பாராமல் ஆசைகளின்றி ஈடுபடும்போது, அது "நிஷ்காம கர்ம யோகம்" என்றும் அழைக்கப்படுகிறது.

நிஷ்காம கர்ம யோகத்தில் நிலைபெற்றிருப்பவர்களில் சிலர் பக்தியில் ஆர்வமுடையவர்களாகவும், வேறு சிலர் ஞானத்தில் ஆர்வமுடையவர்களாகவும் இருப்பர். பக்தியில் ஆர்வமுடையோர் நேரடியாக பக்தி யோகத்தை ஏற்றுக் கொள்வர்; ஞானத்தில் ஆர்வமுடையோர் ஞான யோகத்தைத் தழுவி, பிரம்மத்தை உணர்வதற்காக கடுந்தவங்களைப் புரிந்து வேதங்களிலுள்ள உபநிஷத்துகளை கற்கின்றான். பிரம்மத்தை உணர்வதில் அவன் சற்று உயர்வு பெறும்போது, எல்லோரின் இதயத்திலும் வீற்றுள்ள பரமாத்மாவைப் பற்றி அறிகின்றான். பரமாத்மாவை உணர்வதற்காக எட்டு அங்கங்களைக் கொண்ட "அஷ்டாங்க யோகம்" என்னும் வழிமுறையை ஏற்கின்றான். பரமாத்மாவின் மீது தியானம் செய்வதை முக்கிய அங்கமாகக் கொண்ட இந்த யோக முறை, தியான யோகம் என்றும் அழைக்கப்படுகிறது.




எந்தவொரு பௌதிக ஆசையும் இன்றி, பரப்பிரம்மனுடன் ஐக்கியமாவதற்கோ யோக சித்திகளைப் பெறுவதற்கோ விரும்பாமல், முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை திருப்திப்படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, அவரைப் பற்றி கேட்டல், கூறுதல், நினைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் வழிமுறை "பக்தி யோகம்" எனப்படுகிறது. தூய பக்தர்களின் சகவாசத்தினால் அடையப்படும் இம்முறை எல்லா யோகத்திலும் சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் எளிமையானதாகவும் திகழ்கின்றது.

கர்ம யோகம் என்னும் தலைப்பிலுள்ள பகவத் கீதையின் மூன்றாம் அத்தியாயத்தில், கர்ம காண்டம், ஸகாம கர்ம யோகம், நிஷ்காம கர்ம யோகம் ஆகிய மூன்று நிலைகள் விளக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

## இரண்டாம் அத்தியாயத்திற்கும் மூன்றாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

இரண்டாம் அத்தியாயத்தில் புத்தி யோகத்தைப் பற்றிக் கூறும்போது, (49ஆவது ஸ்லோகத்தில்) மோசமான செயல்களைப் புறக்கணித்துவிடும்படி இறைவன் அறிவுறுத்தினார். போரில் ஈடுபடுவதை மோசமான செயலாகக் கருதிய அர்ஜுனன், "கடமையைச் செய்வதைக் காட்டிலும் புத்தி யோகம் சிறந்தது என்னும் பட்சத்தில், கோரமான போரில் என்னை ஏன் பலவந்தமாக ஈடுபடுத்துகின்றீர்," என்று கிருஷ்ணரிடம் கேட்கும் கேள்வியுடன் "கர்ம யோகம்" என்னும் மூன்றாம் அத்தியாயம் தொடங்குகின்றது.

## எது சிறந்தது?

"கடமையைச் செய்வதா, கடமையைத் துறப்பதா, இரண்டில் எது சிறந்தது? இரண்டையும் ஒன்று போலக் கூறும் உமது அறிவுரையால் எனது புத்தி பேதலிக்கின்றது. தெளிவுபடுத்த வேண்டுகிறேன்," என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் உரைக்க, கிருஷ்ணர் கர்ம யோகம் குறித்து விளக்கமளிக்கத் தொடங்குகின்றார். கர்ம யோகம். ஞான யோகம் ஆகிய இரண்டு பாதைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஞானமின்றி செய்யப்படும் கர்மங்கள் வெறும் சடங்குகளே, கர்மங்கள் இல்லாத ஞானம் வெறும் மனக் கற்பனையே. செயல்களிலிருந்து விலகிக் கொள்வதாலோ துறவறம் ஏற்பதாலோ பக்குவமடைய முடியாது. கர்ம யோகத்தைப் பின்பற்றி இதயம் தூய்மையடைந்த பின்னர், வாழ்வின் இறுதியில் துறவை ஏற்க முடியும்.

துறவை ஏற்பவர்களும் சரி, கடமையைச் செய்பவர்களும் சரி, செயல்படுதல் என்பது அனைவருக்கும் உரியதாகும். ஒரு கணம்கூட செயல்கள் எதையும்செய்யாமல்இருப்பதுஎவருக்கும் சாத்தியமல்ல. செயல்பட மறுத்து, அதே சமயத்தில் மனதை புலனின்பப் பொருள்களில் அலைபாய விடுபவன், போலி மனிதன் எனப்படுகிறான். அத்தகு போலி மனிதனைக் காட்டிலும், புலன்களை மனதால் கட்டுப்படுத்தி, பற்றின்றி கர்ம யோகத்தில் செயல்படும் மனிதன், மிக உயர்ந்தவனாவான். விஷ்ணுவிற்காகச்செய்யப்படும்செயல்கள் தூய்மைப்படுத்துபவை; மற்ற செயல்கள் ஜடவுலகத்துடன் பந்தப்படுத்துபவை. எனவே, அவரது திருப்திக்காக உனது கடமைகளைச் செய், நீ எப்போதும் பந்தத்திலிருந்து விடுபடுவாய்.

## கர்ம காண்டத்திலிருந்து கர்ம யோகம்

யாகங்கள் அனைத்தும் விஷ்ணு வைத் திருப்திப்படுத்துவதற்கானவை. ஆரம்பநிலையில்(கர்மகாண்டநிலையில்) ஜடவுலகில் மகிழ்ச்சியாக வாழ்வதற்காக அந்த யாகங்கள் தேவர்களை நோக்கி நிறைவேற்றப்படுகின்றன. யாகங்களால் மகிழ்ச்சியடையும் தேவர்கள், மனிதர் களுக்கு வேண்டியவற்றை வழங்க, இரு தரப்பினரும் தங்களது ஒத்துழைப் பினால் நலமுடன் வாழ முடியும். தேவர்கள் தருவதைப் பெற்றுக் கொண்டு, அவற்றை அவர்களுக்குப் படைக்காமல் அனுபவிப்பவன் நிச்சயம் திருடனாகக் கருதப்படுகிறான். யாகத்தில் அர்ப்பணிக் கப்பட்ட உணவை உண்பவன் பாவங் களிலிருந்து விடுபடுகிறான், சுய புலனின் பத்திற்காக உணவு தயாரிப்பவன் பாவத் தையே உண்கிறான்.

எல்லா ஜீவன்களின் உடல்களும் தானியங்களைச் சார்ந்தவை; தானியங்கள் மழையைச் சார்ந்தவை; மழை யாகங்களைச் சார்ந்தது; யாகங்கள் கடமையைச் சார்ந்தவை; கடமைகள் வேதங்களைச் சார்ந்தவை; வேதங்கள் முழுமுதற் கடவுளிடமிருந்து வருபவை. யாகச் சக்கரம் எனப்படும் இவ்வழிமுறை நிச்சயம் பின்பற்றப்பட வேண்டும். ஜடவுலக இன்பத்திற்காக தேவர்களை வழிபடுவோர் (கர்ம காண்டத்தைப் பின்பற்றுவோர்), வேதங்கள் முழுமுதற் கடவுளிடமிருந்து வருகின்றன என்பதை அறியும் பட்சத்தில், கர்ம யோகத்திற்கு உயர்வு பெறுகின்றனர்.

## பற்றற்று கடமைகளைச் செய்தல்

தன்னையுணர்ந்த நபருக்குக் கடமைகள் ஏதுமில்லை; அவர் அடைய வேண்டியதும் ஏதுமில்லை. இருப்பினும், கடமையைச் செய்யாதிருக்கும் அவசியமும் அவருக்கு இல்லை. செயல்களின் பலனில் பற்றுதல் கொள்ளாமல் செயல்படும் அத்தகு நபர்கள் பரத்தை அடைவர். அவர்கள் உயர்ந்த நபர்களாக இருப்பதால், பொதுமக்கள் இயற்கையாகவே அவர்களைப் பின்பற்றுவர். எனவே, பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக, ஜனகரைப் போன்ற தன்னையுணர்ந்த நபர்களும் தங்களது கடமைகளைச் செய்து வந்தனர்.

அதே காரணத் திற்காக, மூவுலகங் களிலும் எந்தக் கடமையும் இல்லாத முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரும் கடமைகளில் ஈடுபட்டுள் ளார். அவர் கடமைகளைச் செய்யாவிடில், உலகம் முழுவதும்சீரழிந்துவிடும், தேவையற்ற ஜனத் தொகை உருவாகி, உயிர்வாழிகளின் அமைதி சீர்குலைந்து விடும். தனதுகடமையைச் செய்தால் (போர் புரிந்தால்) தேவையற்ற ஜனத்தொகை உருவாகும் என்னும் அர்ஜுனனின் வாதம், கடமையைச் செய்யாவிடில் தேவையற்ற ஜனத்தொகை உருவாகும் என்னும் இக்கூற்றின் மூலம் ஸ்ரீ கிருஷ்ணரால் முறியடிக்கப்படுகிறது.

பலனில் பற்றுதல் கொண்டுள்ள அறிவற்றோரை சரியான பாதையில் வழிநடத்துவதற்காக, தங்களுக்கென்று கடமைகள் இல்லாத அறிஞர்களும் கடமைகளைச் செய்கின்றனர். அத்தகு அறிஞர்கள் அறிவற்றோரைக் குழப்பக் கூடாது; கடமைகளைத் துறக்கும்படி ஊக்குவிக்கக் கூடாது. எல்லாவிதச் செயல்களிலும் அவர்களை ஈடுபடுத்தி படிப்படியாக அவர்களை முன்னேற்ற வேண்டும். அறிவற்ற அந்த நபர்கள், அஹங்காரத்தின் காரணத்தினால், ஜட இயற்கையின் முக்குணங்களால் நடைபெறும் செயல்களுக்குத் தங்களையே காரணமாக எண்ணிக் கொள்கின்றனர். அறிவுடையவனோ, புலனுகர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை.



தங்களுக்கென்று கடமைகள் ஏதும் இல்லாவிடினும், பொதுமக்களுக்கு வழிகாட்டுவதற்காக கடமையைச் செய்யும் (குருகுலத்திற்குச் சென்று கல்வி கற்கும்) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் பலராமரும்

அத்தகு அறிவுடையோன் மேலும் வளர்ச்சிபெறும்போது, பக்தி யோகத்தின் தளத்தை அடைகிறான். கிருஷ்ணரைப் பற்றிய முழு அறிவுடன் எல்லாச் செயல்களையும் கிருஷ்ணருக்கு அர்ப்பணித்து, பலனில் ஆசைகளின்றி கிருஷ்ணருக்காகச் செயல்படத் தொடங்குவான். அத்தகு நபர்கள், கர்ம பந்தத்திலிருந்து எளிதில் விடுதலையடைகின்றனர். ஆனால் கிருஷ்ணரின் அறிவுரைகளை அவமதித்து, பொறாமையினால் அவற்றைப்பின்பற்றமறுப்பவன்,அறிவை இழந்த முட்டாளாகக் கருதப்படுகிறான்.

## காமம், கோபத்தின் விளைவுகள்

செயல்களை எவ்வாறு நல்லபடியாக முறைப்படி செய்வது என்பதைக் கேட்டறிந்த அர்ஜுனன், "ஒருவனுக்கு விருப்பமில்லாவிட்டாலும் பலவந்தப்படுத்தப்பட்டது போன்று, சில சமயங்களில் பாவ காரியங்களைச் செய்வது ஏன்?" என்று வினவினான். காமமே இதற்குக் காரணம்; ரஜோ குணத்தில் தோன்றி பின்னர் கோபமாக உருவெடுக்கும் காமமே, உயிர்வாழியின் மிகப்பெரியஎதிரியாகும். எவ்வாறுநெருப்பு புகையாலும் கண்ணாடி தூசியாலும் கரு கருப்பையாலும் மறைக்கப்பட்டுள்ளதோ, அதுபோல, எல்லா உயிர்வாழிகளும் காமத்தின் பல்வேறு நிலைகளால் மறைக்கப்பட்டுள்ளனர். ஒருபோதும் திருப்தியடையாத இந்த காமம், ஜீவனின் புலன்கள், மனம், புத்தி ஆகிய இடங்களில் அமர்ந்தபடி ஜீவனைக் கட்டுப்படுத்துகின்றது. ஜடப் பொருள்கள், புலன்கள், மனம், புத்தி என இவையனைத்திற்கும் உயர்ந்ததாக விளங்கும் ஆத்மாவைப் பற்றிய அறிவினால் நித்திய எதிரியான காமத்தை வெற்றி கொள்ள வேண்டும்.

கீதையின் இந்த மூன்றாம் அத்தியாயம், உருவற்ற சூன்யத்தை இறுதி இலட்சியமாகக் கொள்ளாமல், தான் பரம புருஷ பகவானுடைய நித்தியத் தொண்டன் என்பதை அறியும் கிருஷ்ண உணர்வினை முடிவாகச் சுட்டிக் காட்டுகிறது. பௌதிக வாழ்வில், காம உந்துதல்களாலும் ஜட இயற்கையின் வளங்களை அடக்கியாளும் ஆசையாலும் ஒருவன் நிச்சயமாக வசப்படுத்தப்படுகிறான். அதிகாரத்தன்மைக்கான ஆசைகளும் புலனுகர்ச்சிக்கான ஆசைகளும் கட்டுண்ட ஆத்மாவின் பரம எதிரிகளாகும்; ஆனால் கிருஷ்ண உணர்வின் பலத்தால், ஜடப் புலன்கள், மனம், புத்தி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முடியும். தொழிலையும் விதிக்கப்பட்ட கடமையையும் திடீரென விட்டுவிடத் தேவையில்லை; மாறாக, படிப்படியாக கிருஷ்ண உணர்வை அபிவிருத்தி செய்துகொள்வதன் மூலம், தனது ஸ்வரூபத்தை நோக்கிச் செலுத்தப்படும் ஸ்திரமான புத்தியினால், பௌதிகப் புலன்களாலும் மனதாலும் பாதிக்கப்படாத திவ்யமான தளத்தில் நிலைபெற முடியும். இதுவே இந்த அத்தியாயத்தின் சாரமாகும்..

## மூன்றாம் அத்தியாயத்தின் நான்கு பகுதிகள்

**இரண்டாம் அத்தியாயத்துடனான தொடர்பு:** 2.49, தூரேண ஹ்யவரம் கர்ம, மோசமான செயல்களிலிருந்து விலகி இருப்பாயாக

(1) கடமையைச் செய்வதா, கடமையைத் துறப்பதா, எது சிறந்தது (3.1–9)
- இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை (3.3)
- கர்மத்தின் மூலம் தூய்மையடைதல் (3.4)
- செயல்படாமல் யாரும் இருக்க முடியாது, ஆத்மாவின் இயற்கை (3.5)
- புலன்களைக் கட்டுப்படுத்தி மனதை அலைபாய விடுபவன் (3.6)
- விஷ்ணுவிற்காகச் செய்யப்படும் செயல்கள் தூய்மைப்படுத்துபவை (3.9)

(2) கர்ம காண்டத்திலிருந்து கர்ம யோகம் (3.10–16)
- யாகச் சுழற்சியின் வழிமுறை

(3) பற்றற்று கடமைகளைச் செய்தல் (3.17–35)
- தன்னையுணர்ந்த மனிதனுக்குக் கடமைகள் இல்லை
- மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ்வதற்காக கடமையில் ஈடுபடுகிறான்
- உதாரணம்: ஜனகர், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்
- கடமைகளைச் செய்யாவிடில் வர்ண சங்கரம் ஏற்படும்
- அறிஞர்கள் பற்றுள்ளவர்களைத் தொந்தரவு செய்வதில்லை

(4) காமம், கோபத்தின் விளைவுகள் (3.36-43)
- காமமும் கோபமுமே பலவந்தமாக பாவம் செய்வதற்கான காரணங்கள்
- உயிர்வாழிகள் காமத்தின் பல்வேறு நிலைகளால் கவரப்பட்டுள்ளனர்
  - நெருப்பு, புகை; கண்ணாடி, தூசி; கரு, கருப்பை
- காமம் அமரும் இடங்கள்: புலன்கள், மனம், புத்தி
- காமமே நித்தியமான எதிரி
- தெய்வீக ஞானத்தினால் காமத்தை வெற்றிகொள்ள வேண்டும்.

*ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடு களுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.


**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 7

**வாழும் முதற்கடவுள் வண்புகழ் கண்ணனென்று
வாழும்வல் நூற்கொண்டு வாதிட்டார்– கீழுலகும்
ஓங்கித் துளைத்தானும் ஒண்மாலும் சிங்கனும்
ஆங்காங் கவனேதான் என்று. (73)**

எல்லா உயிர்களிடத்தும் வாழ்கின்ற முழுமுதற் கடவுள் மிகுந்த புகழையுடைய கிருஷ்ணரே என்று, நம்மிடையே வாழும் பகவத் கீதை கொண்டு வாதம் செய்தார். மராமரம், மலை மற்றும் கீழ் உலகத்தையும் தன் அம்பினால் துளைத்தவனும், திருமாலும், நரசிங்கனும் கிருஷ்ணரேதான் என்றார்.

**அவனேதான் என்றும் ஆதார மென்று
அவனியைச் சுற்றியொளி ஆக்கி– அவனியின்
ஒப்பில் மதியம்போல் ஓயாது சுற்றினார்
துப்புத் துலங்கத் துறந்து. (74)**



ஸ்ரீல பிரபுபாதர் உயர்ந்த சொற்களைக் கொண்ட எண்ணற்ற நூல்களை எழுதினார். தனது நூல்களைப் பிறரிடம் கொண்டு சேர்த்தவர்களை மிகவும் ஊக்கப்படுத்தினார்.

கிருஷ்ணரே என்றும் நமக்கு ஆதாரம் என்ற உண்மையை உலகெங்கும் சுற்றிப் பிரகாசிக்கச் செய்தார். உலகில் ஒப்பில்லாத சந்திரன்போல் ஒளிகொண்டு தளராது சுற்றியது, உண்மை அறிவு மக்களிடையே நன்கு விளங்குவதற்குத்தான்.

**துறந்தார்கட் சூத்திரம் தூக்கி யுலகிற்
திறம்பட வாதிப்பர் தீதாய்– அறத்தாற்
பிரமவா தத்தின் பிழைசாடி நின்றார்
பரமனின் கீதை பகர்ந்து. (75)**

துறந்தவர்கள் வேதாந்த சூத்திரத்தை வைத்துக் கொண்டு உலகில் திறம்படத் தீதான வாதம் செய்வார்கள், இறைவனுக்கு உருவம் கிடையாது என்பர், எல்லாம் பிரம்மன் என்பர். தகுந்த அறத்தை எடுத்துக் கூறுகின்ற கிருஷ்ணரின் பகவத் கீதையைச் சொல்லிப் பிரம்ம வாதத்தின் குற்றத்தைச் சாடினார். கிருஷ்ணர்தான் முழுமுதற் கடவுள் என்பதை நிலைநாட்டினார்.

**கீதை பகர்ந்து, கிளைகள் உருவாக்கிப்
பேதையாய்ப், பித்தராய்ப், பண்பிலராய்ப்– போதையிற்
தோய்ந்தவராய் நின்றாரைத் தோட்கொடுத் துய்வித்தார்
வாய்வாழ்த்த உண்டோ வரம்பு. (76)**

கீதையை எடுத்துச் சொல்லித், தன் அமைப்பின் கிளைகளை உலகெங்கும் உருவாக்கி, அறிவில்லாதவர்களாக, பைத்தியக்காரர்களாக, பண்பற்றவர்களாகக் குடிபோதையில் தோய்ந்தவர்களாக நின்றவர்களுக்குத் தோள்கொடுத்து ஈடேற வைத்தார். அத்தகைய பிரபுபாதரை வாழ்த்துவதற்கு வரம்பு ஏதும் உண்டோ?

**வரம்பிற் பிறப்பிறப்பு வாட்டுவதால் வீழ்வார்
கரம்தொட்டுக் காக்கின்றார் காண்மின்– பரமன்
இதம்கிட்டச் சேர்ப்பான், இதனினும் மிக்க
உதவிவே றுண்டோ உயிர்க்கு. (77)**

வரம்பில்லாத பிறப்பு இறப்பின் துன்பமான நிலையில் வீழ்ந்திருப்போரை கைதொட்டுக் காக்கின்றார். பிரபுபாதரின் இத்தகு கருணையால் கிருஷ்ணரின் இதமான சேர்க்கை கிட்டும். இந்த உதவியைக் காட்டிலும் பெரிய உதவி உயிருக்கு வேறென்ன இருக்க முடியும்.

உயிர்வாழி போக்கை உடனிருந்து மாற்ற
மயர்வறுக்கும் தத்துவ மாய்ந்து– உயர்மொழிநூல்
எண்ணில் ஆக்கி, எடுத்தளித்தா ரைஊக்கி
மண்ணிற்தொண் டாற்றினார் மாண்டு. (78)

உயிர்வாழிகளின் போக்கைக் கூட இருந்தே மாற்றுவதற்காக, அறியாமையை அறுக்கும் தத்துவங்களை ஆராய்ச்சி செய்து, உயர்ந்த சொற்களைக் கொண்ட எண்ணற்ற நூல்கள் எழுதினார். தனது நூல்களைப் பிறரிடம் கொண்டு சேர்த்தவர்களை ஊக்கப்படுத்தினார். இவ்வாறு மண்ணில் உயர்ந்த தொண்டாற்றினார்.

மாண்டதம் நூற்களை மக்களின் கைசேர்த்துத்
தூண்டும் புலன்வென்று தூய்மையால்– யாண்டும்
பகவானின் கீதம் பரப்பியுப யோகம்
பகவனுக்காய்ச் செய்யுமென்றார் பார்த்து. (79)

சிறந்த தம்நூல்களை மக்களின் கைகளிலே சேர்த்துப் புலன்களை வென்ற தூய்மையான நிலையில், என்றும் பகவானின் கீதையைப் பரப்புங்கள், செல்வத்தை அவனுக்காகப் பார்த்து உபயோகம் செய்யுங்கள் என்றார்.

பார்த்தன் பணிந்துபெரும் பாரதப்போர் வென்றதுபோல்
ஆர்த்தெழுந்து மாயை அடங்கிடக்– கீர்த்தனமும்
கீதையும் கைக்கொண்டு கீர்த்திமிகக் கோலினார்
பாதை, உயரும் படிக்கு. (80)

பார்த்தன் (அர்ஜுனன்) கிருஷ்ணரின் கட்டளைகளைப் பணிவுடன் ஏற்றுப் பாரதப்போரை வென்றது போல், சீரியெழுந்து மாயையினை வென்று, கீர்த்தனத்தையும் கீதையும் கைக்கொண்டு, புகழ் மிகும்படியாக வழிகோலினார். அந்த வழியானது உயர்ந்த படிக்கு மேலும் உயர நம்மை எடுத்துச் செல்லும்.

படிப்படியாய் மாயப் படைப்பு மனத்துட்
குடிப்புகா வண்ணம் குலைத்து– பிடிப்புக்
கடிதுபுள் ஊர்ந்தான் கலின்பால் ஓங்கப்
படிபேர்சொல் என்றார் பரிந்து. (81)

தன்னுடைய போதனைகளின் மூலம், படிப்படியாய் மாயையினுடைய படைப்பானது மனதில் குடிபுகா வண்ணம் தடுத்தார். பற்றானது வேகமாகக் கருட வாகனத்தில் சென்று கஜேந்திரனைக் காப்பாற்றிய கிருஷ்ணர் கழலின்மீது பெருகப், பரிந்து கீதை படி, அவன் பேர்சொல் என்றார்.

பரிந்துயான் கூறுவேன் பக்திவே தாந்தர்
புரிந்தவை புந்தியில் வைமின்– எரிந்த
வனத்தின் நெருப்பினை வாயினுள் வைத்தான்
இனத்தினைச் சேர்மின் இனிது. (82)

நானும் பரிந்து கூறுகின்றேன். பக்திவேதாந்தர் செய்த ஒப்பற்ற செயல்களை மனத்தில் வையுங்கள். எரிந்து கொண்டிருந்த வனத்தின் நெருப்பை உறிஞ்சி வாயினுள் அடக்கிய கிருஷ்ணரின் அடியார்களுடன் இனிது சேர்வீர்கள்.



கிருஷ்ண லீலைகளில் பக்தர்கள் பங்குபெற விருந்தாவனத்தில் தான் அமைத்த கோவிலின் முன்பு ஸ்ரீல பிரபுபாதர்.

இனிதினிது வைணவர் இன்மொழி கூர்தற்
தனிப்பெரும் காதலாற் தந்தார்– பனிப்புல்
இனிதுமேய்க் குங்கால் இடையனொடு கூடி
வனிகை புரளு வதற்கு. (83)

வைணவப் பெரியவரான பிரபுபாதர் அவர்களின் இனிய சொற்களை நோக்குதல் இனிமையினும் இனிமையானது. கிருஷ்ணர்பால் உள்ள தனிப்பெருங் காதலால் இனிய மொழிகளைத் தந்தார். அவருடைய உள்ஆர்வம் எல்லாம் கிருஷ்ணன் பனிப்புல் மேய்க்கும்பொழுது அவனுடன் கூடிக்குதிப்பதும் புரளுவதும் தான்.

புரளு வதற்கீந்து பக்திவெண் ணெய்போற்
திரளு வதற்குத் தணிந்து– உரல்பால்
மருளு வதற்கு மிசைந்த இடையன்
அருளு வதற்கு அவர். (84)

அவ்வாறு நாமும் புரளுவதற்கு விருந்தாவனத்தில் இடம் கொடுத்து, அவனிடம் பக்தியானது தூய வெண்ணெய்போல் திரள்வதற்குத் தணிந்து வந்து, உரலைக் கண்டு அஞ்சுவது போல் நடித்துக் கட்டுண்ணவும் இசைந்த அவன் அருள் செய்ய வேண்டும் என்றால், பிரபுபாதருடைய கருணை வேண்டும். (தொடரும்)

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.

# விஞ்ஞானமும் நம்பிக்கையும்

***தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவரது சீடர் ஒருவருக்குமிடையே 1975ஆம் ஆண்டின் மே மாதத்தில், ஆஸ்திரேலியாவில் உள்ள பெர்த் நகரில், காலை நடைப்பயிற்சியின் போது பதிவு செய்யப்பட்ட உரையாடல்.***

**சீடர்:** (பௌதிக விஞ்ஞானியின் கதாபாத்திரத்தை ஏற்று) கிருஷ்ண உணர்வை நீங்கள் ஏன் விஞ்ஞானம் என்கிறீர்கள்? இஃது ஒரு நம்பிக்கையாக மட்டுமே தோன்றுகிறது.


**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் விஞ்ஞானம் என்று கூறுவதும் நம்பிக்கையே. நீங்கள் உங்களது முறையை விஞ்ஞானம் என்று அழைத்தால், எங்களது முறையும் விஞ்ஞானம்தான்.

**சீடர்:** ஆனால் எங்களது விஞ்ஞானத்தால் எங்களது நம்பிக்கைகளை உறுதி செய்ய இயலும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், ரசாயனங்களிலிருந்து உயிர் தோன்றுகிறது என்பதை நிரூபியுங்கள். ரசாயனங்களிலிருந்து உயிர் தோன்றியது என்பது உங்களது நம்பிக்கை. அதை நீங்கள் நிரூபித்துவிட்டால், உங்களது முறை விஞ்ஞானம் என்று ஏற்கப்படலாம். ஆனால், உங்களால் அதை நிரூபிக்க இயலாது. ஆகவே, அது வெறும் நம்பிக்கையாகவே உள்ளது.

**சீடர்:** அப்படிப் பார்த்தால், நீங்கள் ஆத்மாவில் நம்பிக்கை வைக்கின்றீர்; ஆனால் ஆத்மா இருப்பதை உங்களால் நிரூபிக்க இயலாது. எங்களால் ஆத்மாவைப் பார்க்க இயலவில்லை என்பதால், உயிர் ஜடப் பொருளிலிருந்து வருவதாக நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** உங்களது வெளிப்புற புலன்களால் ஆத்மாவைப் பார்க்க முடியாது, ஆனால் அதனை உணர முடியும். உணர்வு இருப்பதை நம்மால் அறிய முடியும்; உணர்வே ஆத்மாவின் அறிகுறி. ஆனால் நீங்கள் கூறுவதுபோன்று, ஜடத்திலிருந்து உயிர் தோன்றுகின்றது என்றால், தேவையான ரசாயனங்களைக் கொண்டு இறந்து போன உடலை மீண்டும் உயிர்ப்பித்துக் காட்டுங்கள் பார்க்கலாம். இதுவே எனது சவால்.



**சீடர்:** சரியான ரசாயனத்தைக் கண்டுபிடிக்க சிலகாலம் தேவைப்படலாம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், நீங்கள் பேசுவது அபத்தமானதாகும். ரசாயனத்திலிருந்து உயிர் தோன்றுகின்றது என்பதே உங்களது நம்பிக்கை. ஆனால் உங்களால் அதை நிரூபிக்க முடியாது. இதன் மூலம் உங்களை நீங்களே அயோக்கியன் என்று நிரூபித்துவிட்டீர்கள்.

**சீடர்:** ஆனால் நீங்களும் பகவத் கீதையை நம்பிக்கையின் அடிப்படையில்தானே ஏற்றுக்கொள்கிறீர்கள். அஃது எப்படி விஞ்ஞானமாகும்? அது வெறும் நம்பிக்கை தானே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அஃது ஏன் விஞ்ஞானமாகாது? *அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாத் அன்ன-ஸம்பவ:,* "எல்லா உயிரினங்களும் தேவையான அளவு தானியங்களை உண்டு உயிர் வாழ்கின்றன. அந்த தானியங்கள் மழையினால் உற்பத்தி செய்யப்படுகின்றன," என்று பகவத் கீதை (3.14) கூறுகின்றது. இது வெறும் நம்பிக்கையா?

**சீடர்:** இது நிச்சயம் உண்மையே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுபோலவே பகவத் கீதையில் உள்ள ஒவ்வொன்றும் உண்மையே. இதுகுறித்து நீங்கள் கவனமாகச் சிந்தித்தால், அதில் உள்ளவை அனைத்துமே உண்மை என்பதை நீங்கள் காண்பீர்கள். ஆத்மாவையும் கடவுளையும் உணர்ந்த *பிராமணர்கள்* எனப்படும் அறிவாளிகளின் பிரிவு சமுதாயத்தில் நிச்சயம் இருக்க வேண்டும் என்று பகவத்

**விஞ்ஞானிகள் யூகத்தின் அடிப்படையில் செயல்படுகின்றனர். இன்று ஒரு விஷயத்தை உண்மை என்பர், நாளை அதனை உண்மையல்ல என்பர். ஆனால் பகவத் கீதையின் ஞானமோ 12 கோடி வருடங்களாகியும் மாறாமல் அப்படியே உள்ளது.**

கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார். அவனே நாகரிகமடைந்த மனிதன். ஆனால் இன்றைய சமூகத்தில் அத்தகைய மக்கள் எங்குள்ளனர்?

**சீடர்:** ரப்பிகள் (யூத மத போதகர்கள்), பாதிரியார்கள், மந்திரிகள் என பலர் உள்ளனரே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால் கடவுளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? நான் கூறும் இந்த ஒரு கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். அனைவரையும்விட உயர்ந்த அதிகாரி ஒருவர் உள்ளார். நீங்கள் சுதந்திரமானவர் அல்ல என்பதை வைத்து, மிகவுயர்ந்த அதிகாரி உள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அந்த மிகவுயர்ந்த அதிகாரி யார் என்பது உங்களுக்குத் தெரியாது. அந்த மிகவுயர்ந்த அதிகாரியைப் பற்றி உங்களுக்குத் தெரியாவிடில், உங்களது அறிவினால் என்ன பயன்?

உதாரணமாக, ஒரு மனிதனுக்கு அவனது நாட்டு அரசாங்கத்தைப் பற்றித் தெரியவில்லை எனில், அவன் எப்படிப்பட்ட மனிதன்? அவன் வெறும் மூன்றாம் தர மனிதன், ஓர் அயோக்கியன். நாகரிகமான மனிதன் அவனது நாட்டின் அரசாங்கத்தைப் பற்றி அறிவான். அதுபோலவே மொத்த பிரபஞ்சத்திற்கும் ஓர் அரசாங்கம் உள்ளது, அதை நீங்கள் அறியாவிடில், நீங்கள் மூன்றாம் தர அநாகரிகமான மனிதன் எனப்படுவீர். எனவே, அறிவாளிகளின் பிரிவு மனித சமுதாயத்தில் இருக்க வேண்டியது அவசியம் என்று பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் போதிக்கிறார். அந்த அறிவாளிகள், கடவுளை அறிந்தவர்களாகவும், ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் நிர்வாகத்தைப் புரிந்துகொண்டவர்களாகவும், பிரபஞ்சம் எவ்வாறு கடவுளின் ஆணைப்படி செயல்படுகிறது என்பதை அறிந்தவர்களாகவும் இருப்பர். கிருஷ்ண பக்தர்களாகிய நாங்கள் இவற்றை அறிவோம். எனவே நாங்கள் நாகரிகமடைந்தவர்களாவோம்.

**சீடர்:** ஆனால் 5,000 ஆண்டிற்கு முன்பு எழுதப்பட்ட பகவத் கீதை இன்றைய நிலைமைக்குப் பொருந்தாது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பகவத் கீதை 5,000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதல்ல; அஃது ஏற்கனவே இருந்தது. பகவத் கீதையை நீங்கள் படிப்பது உண்டா?

**சீடர்:** ஆம்.

**ஸ்ரீல பிரபுபாதா:** அப்படியெனில், பகவத் கீதையில் எங்கே அது 5,000 ஆண்டிற்கு முன்பு எழுதப்பட்டதாக உள்ளது? அது முதன்முதலில் 12 கோடி ஆண்டுகளுக்கு முன்பே போதிக்கப்பட்டது. *இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவான் அஹம் அவ்யயம்,* "நான் இந்த விஞ்ஞானத்தை 12 கோடி ஆண்டுகளுக்கு முன்பே விவஸ்வானுக்கு போதித்தேன்" என்று கிருஷ்ணர் (பகவத் கீதை 4.1) கூறுகிறார். உமக்கு இது தெரியாதா? பகவத் கீதையிலிருந்து நீங்கள் என்ன படித்தீர்கள்? பகவத் கீதை, *அவ்யயம்,* அதாவது, நித்தியமாக இருக்கக்கூடியது. அப்படியிருக்க, 5,000 ஆண்டுக்கு முன்பு எழுதப்பட்டதாக எப்படி கூற முடியும்?

(உதயசூரியனை தனது கைத்தடியால் சுட்டிக்காட்டியபடி) சூரியன் உதயமாவதை இப்போது நாம் காண்கிறோம். ஆனால், சூரியன் எப்போதுமே விண்வெளியில் உள்ளது. பகவத் கீதையும் அதுபோன்ற நித்தியமான உண்மையே. சூரியன் உதயமாகும்போது, சூரியன் இப்பொழுதுதான் தோன்றியுள்ளது என்று நாம் சொல்வதில்லை. அஃது எப்போதுமே உள்ளது. ஆனால் சூரியன் உதிக்காதபட்சத்தில், நம்மால் அதைக் காண முடியாது. சூரியன் இரவில் மடிந்துவிடுவதாகவும் பகலில் மீண்டும் பிறப்பதாகவும் மனிதர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். மேலும், பூமி தட்டையானது என்றும் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுக் கருத்து வருகின்றது: இதுவே உங்களின் விஞ்ஞான அறிவு.

**சீடர்:** நாங்கள் உண்மையைக் கண்டறிகின்றோம் என்பதே இதன் பொருள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. உண்மை என்ன என்பது உங்களுக்குத் தெரியாது என்பதே இதன் பொருள். நீங்கள் யூகத்தால் உரைக்கின்றீர்கள். தற்போது சிலவற்றை உண்மை என்று ஏற்கின்றீர்கள், ஆனால் சிலநாள்கள் கழித்து அஃது உண்மையல்ல என்கிறீர்கள். இதையும் விஞ்ஞானம் என்று சொல்கிறீர்கள்!

**சீடர்:** ஆம். நீங்கள் சொல்வது சரியே. சில வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட எத்தனையோ விஞ்ஞான புத்தகங்கள் தற்போது பழையதாகி விட்டன.

**ஸ்ரீல பிரபுபாதா:** இப்போது நீங்கள் உபயோகிக்கும் விஞ்ஞான புத்தகங்கள், இன்னும் சில வருடங்களில் உபயோகமற்றவை ஆகிவிடும். இதுவே உங்களது விஞ்ஞானம்.

**சீடர்:** இருப்பினும், குறைந்தபட்சம் நாங்கள் முன்பு அறிந்திருந்ததைக் காட்டிலும் தற்போது அறிந்துள்ளவை

உண்மையாக உள்ளன. மேலும், தொடர்ந்து முயற்சி செய்தால் இன்னும் அதிகமாக அறிவோம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் எப்பொழுதும் அறியாமையில் இருப்பதையே இது காட்டுகின்றது. ஆனால் பகவத் கீதை அப்படிப்பட்டதல்ல. ‘‘இந்த விஞ்ஞானத்தை நான் முதலில் 12 கோடி ஆண்டுகளுக்கு முன்பு போதித்தேன், இன்று அதே விஷயத்தை உனக்கும் போதிக்கிறேன்’’ என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார். இதுவே விஞ்ஞான அறிவு. உண்மை ஒருபோதும் மாறுவதில்லை, ஆனால் விஞ்ஞானிகளான நீங்கள் எப்போதும் மாற்றிக் கொண்டே இருக்கிறீர்கள்— ‘‘உண்மையைக் கண்டுபிடித்தல்’’ என்று அதைக் கூறிக் கொள்கிறீர்கள். உண்மை என்ன என்பது உங்களுக்குத் தெரியாது என்பதே இதன் பொருள்.

**சீடர்:** (சீடன் என்ற உண்மையான கதாபாத்திரத்தில்) பிரச்சனை என்னவெனில், ஒவ்வொருவரும் ஏமாற்றுக்காரனாக இருப்பதுதான். ஒவ்வொருவரும் யூகிக்கின்றனர், தங்களது யூகத்தின் முடிவை உண்மை என்று எடுத்துரைக்கின்றனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். எனவேதான், நாம் கிருஷ்ணரை ஏற்றுக் கொண்டுள்ளோம், அவர் என்றும் ஏமாற்றப்போவது இல்லை. மேலும், கிருஷ்ணர் என்ன எடுத்துரைத்தாரோ, அதையே நான் திரும்பச் சொல்வதால், நானும் ஏமாற்றுக்காரன் அல்ல. இதுவே எங்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் உள்ள வேற்றுமையாகும்..

## ஸ்ரீதாம் மாயாபூர் (12ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

தீவுகளிலும், தனது வாழ்வின் முதல் இருபத்தி நான்கு வருடம் வரை எல்லையற்ற லீலைகளை நிகழ்த்தினார். பிறகு துறவறம் பூண்டு நாற்பத்தெட்டு வயது வரை ஸ்ரீ ஜகந்நாத பூரியில் அளப்பரிய லீலைகளை நிகழ்த்தி அனைவரின் உள்ளங்களிலும் கிருஷ்ண பிரேமையை ஊன்றி தழைக்கச் செய்தார். ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவை சிலர் சாதாரண மனிதனாகவும், சிலர் சிறந்த சாதுவாகவும், சந்நியாசியாகவும், மகானாகவும் சித்தரிக்கின்றனர். இஃது அவர்களின் அறிவுப் பற்றாகுறையைச் சுட்டிக் காட்டுகிறது. உண்மையில், வேத இலக்கியங்களின் சான்றின்படி, ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு, முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரேயாவார். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் இடைவிடாத முயற்சியால், அவரால் நிறுவப்பட்ட மாயாபூரிலுள்ள ‘‘இஸ்கான்-சந்திரோதய மந்திர்’’ பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் புகழையும், ஸ்ரீ கிருஷ்ண நாமத்தையும், ஸ்ரீ நவத்வீபம் மற்றும் ஸ்ரீ மாயாபூரின் பெருமையையும் உலகிற்குப் பறைசாற்றி வருகிறது.

திரு. விஜய வேங்கடேஷ தாஸ் B.E. அவர்கள், கும்பகோணத்தில் உள்ள இஸ்கான் கோவிலில் முழு நேர தொண்டு புரிந்து வருகிறார்.



இந்தியாவிலேயே 13 ஆண்டுகளாக கயிலாய யாத்திரையை 15 நாட்களிலேயே அதிக சலுகையுடன் யாரும் தர இயலாத மிகக் குறைந்தக் கட்டணத்தில் நவீன வசதியோடு அனைவரையும் கிரிவலம் அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க நிறுவனம்.

# முக்திநாத்-கைலாஷ்-மானஸரோவர்

## மே 7, ஜூன் 5, ஜூலை 4, ஆகஸ்ட் 3, செப்டம்பர் 2, 2011

புனிதத்துவம் வாய்ந்த முக்திநாத் மற்றும் மானஸரோவரின் எழுச்சி மிக்க சக்தியை நீங்கள் உணரக்கூடிய அரிய வாய்ப்புடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவரில் புனித நீராடி, பிரதோஷத்தில் கிரிவலம் வர நேபாளில் உள்ள உலகத்தரம் வாய்ந்த NO.1 நிறுவனமான RICHA TOURS உடன் இணைந்து ஒவ்வொரு குழுவிலும் சத்சங்கங்கள் மற்றும் பஜன், தியானத்துடன் புறப்படுகிறோம்.

## ரயில் மூலம் 22 நாட்கள், விமானம் மூலம் 15 நாட்கள்

காட்மண்டிலிருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மண்டு வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.64,900/- மட்டுமே**
சென்னையிலிருந்து டெல்லி வழியாக காட்மண்டு சென்று வர விமானக் கட்டணம் தனி. (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து இரயில் மூலம் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் இரயில் மூலம் சென்னை வருவதற்கு 22 நாட்கள் ஆகும். இரயில் கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) **ரூ.67,900/- மட்டுமே** (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

காட்மண்ட்டிலிருந்து மனக்கமனா, போக்ரா, ஜோம்சோம் வழியாக முக்திநாத் சென்று உபன்யாசத்துடன் தரிசனம் செய்து, மீண்டும் காட்மண்டு வருவதற்கு 5 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.13,900/- மட்டுமே** (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

நேபாள எல்லை கோடாரியில் தொடங்கி மீண்டும் நேபாள எல்லை திரும்பி வரும் வரை யாத்திரை காலம் முழுவதிலும் எந்த இடத்திலும் TENT இல்லாமல் எங்களுக்கு சொந்தமான RICHA TOURS-ன் HOTEL மற்றும் GUEST HOUSE-களில் பாதுகாப்பாகவும் வசதியாகவும் குளிருக்கு ஏற்றபடி தங்கி சிறப்பாக தரிசனம் செய்யலாம்.
**நேபாள எல்லையிலிருந்து சொந்தமாக ஹோட்டல் மற்றும் கெஸ்ட் ஹவுஸ் வசதி எங்கள் நிறுவனத்திற்கு மட்டுமே உண்டு.**

♦ காட்மண்டில் ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி ♦ மானஸரோவர், கயிலாயம், முக்திநாத்தில் சாஸ்திரிகளைக் கொண்டு அவரவர்களுக்கு சிறப்பு பூஜை செய்யப்படும் ♦ ஒவ்வொரு ஜீப்பிலும் ஆக்சிஜன், மாஸ்க் வசதியுடன் 4 அன்பர்கள் மட்டுமே ♦ கயிலை பயணம் வீடியோ எடுக்கப்படும் ♦ யாத்திரை காலம் முழுவதும் மினரல் குடிநீருடன் ஆசாரமான பிராமணாள் உணவு ♦ மருத்துவ வசதி ♦ குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான கெஸ்ட் ஹவுஸ் மற்றும் ஹோட்டல்கள் ♦ சென்னையிலிருந்து யாத்திரை சென்று இறைவனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

திருமுறை ஓதுபவர்கள், டாக்டர்கள் மற்றும் குருப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை. பாஸ்போர்ட் அவசியம். இல்லாதவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.
முக்திநாத், கைலாய பயணத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடனும் பாதுகாப்புடனும் தரமான, சுகாதாரமான தமிழக உணவு வகைகளை 3 வேளையும் வழங்கி ஒவ்வொரு குழுவிலும் டாக்டர்கள் துணையுடன் அனைத்து வயதினரையும் (no age limit) அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க ஒரே நிறுவனம்.




## ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

**Mukthinath - Kailash & Manasarovar Yatra Organised by Brahmins**
63, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.
**Cell : 97911 11979 / 94446 76757** (24 Hrs)




**SPECIAL CARE FOR SENIOR CITIZENS ENJOY POURNAMI (FULLMOON NIGHT) AT MANASAROVER**

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் ஒன்று

வ்யாஸ உவாச
இதி ஸம்ப்ரஷ்ன-ஸம்ஹ்ருஷ்டோ
விப்ராணாம் ரௌமஹர்ஷணி:
ப்ரதிபூஜ்ய வசஸ் தேஷாம்
ப்ரவக்தும் உபசக்ரமே

### மொழிபெயர்ப்பு

பிராமணர்களின் பக்குவமான கேள்விகளால் பூரண திருப்தியுற்ற ரோமஹர்ஷணரின் புதல்வரான உக்ரஸ்ரவா (சூத கோஸ்வாமி), அவர்களுக்கு நன்றி கூறிய பின்னர் பதிலளிக்க முற்பட்டார்.

### பொருளுரை

நைமிசாரண்யத்தின் முனிவர்கள் சூத கோஸ்வாமியிடம் ஆறு கேள்விகளைக் கேட்டனர். அவற்றிற்கு அவர் ஒவ்வொன்றாக பதிலளித்தார்.

### ஸ்லோகம் 2

ஸூத உவாச
யம் ப்ரவ்ரஜந்தம் அனுபேதம் அபேத-க்ருத்யம்
த்வைபாயனோ விரஹ-காதர ஆஜுஹாவ
புத்ரேதி தன்-மயதயா தரவோ 'பினேதுஸ்
தம் ஸர்வ-பூத-ஹ்ருதயம் முனிம் ஆனதோ 'ஸ்மி

### மொழிபெயர்ப்பு

ஸ்ரீல சூத கோஸ்வாமி கூறினார்: எல்லோருடைய இதயத்திற்குள்ளும் நுழையக்கூடிய மாமுனிவருக்கு (சுகதேவ கோஸ்வாமிக்கு) நான் எனது பணிவான வணக்கங்களை தெரிவிக்கின்றேன். உயர் வகுப்பினரால் அனுஷ்டிக்கப்படும் பூணூல் அணியும் சடங்கு உட்பட எந்த சடங்குகளையும் மேற்கொள்ளாமல், துறவறம் (சந்நியாசம்) ஏற்பதற்காக வீட்டை விட்டு அவர் வெளியேறியபோது, அவருடைய பிரிவிற்காக அஞ்சிய அவரது தந்தை வியாஸதேவர், "மகனே!" என்று கதறினார். துயரத்தில் ஆழ்ந்த தந்தைக்கு, அதேபோன்ற பிரிவுணர்ச்சியில் மூழ்கிய மரங்கள் மட்டுமே மறுமொழி வழங்கின என்பதே உண்மை.

### பொருளுரை

வர்ணாஷ்ரம அமைப்பு, அதைப் பின்பற்றுபவர்களுக்கு பல ஒழுக்க விதிகளை நியமித்துள்ளது. வேதங்களைக் கற்க விரும்பும் மாணவன், ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவை அணுகி தன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி அவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று அத்தகைய விதிகள் கட்டளையிடுகின்றன. ஆச்சாரியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவிடமிருந்து வேதங்களை கற்பதற்கு ஒருவர் தகுதியுடையவர் என்பதற்கு பூணூல் ஓர் அறிகுறியாக உள்ளது. ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி தனது பிறப்பிலிருந்தே முக்தி பெற்ற ஆத்மாவாகத் திகழ்ந்ததால், அத்தகைய புனிதப்படுத்தும் சடங்குகளை அவர் மேற்கொள்ளவில்லை.

பொதுவாக, ஒரு மனிதன் பிறக்கும்போது சாதாரண மனிதனாகவே பிறக்கிறான், புனிதப்படுத்தப்படும் சடங்குகளின் மூலம் அவன் இரண்டாவது முறையாகப் பிறவியெடுக்கிறான். புத்தொளி பெற்று ஆன்மீக முன்னேற்றத்திற்கான பாதையை அவன் நாடும்போது, வேத உபதேசங்களைப் பெறுவதற்காக அவன் ஓர் ஆன்மீக குருவை அணுகுகின்றான். உண்மையாகவும் தீவிரமாகவும் அணுகுபவனை மட்டுமே தமது சீடனாக ஏற்கும் ஆன்மீக குரு, அவனுக்குப் பூணூல் அளிக்கின்றார். இவ்வாறாக அம்மனிதன் த்விஜ, அதாவது இரு பிறப்பு எய்தியவனாக ஆகின்றான். த்விஜன் என்னும் தகுதியைப் பெற்றபின் ஒருவன் வேதங்களைக் கற்கலாம், வேதங்களை நன்றாக கற்றுணர்ந்தபின் அவன் விப்ரன் எனப்படுகிறான். விப்ரன் அல்லது தகுதிவாய்ந்த பிராமணன், பரம்பொருளை உணர்ந்து, ஆன்மீக வாழ்வில் மேலும் தொடர்ந்து முன்னேற்றமடையும்போது, இறுதியாக வைஷ்ணவன் என்னும் நிலையை அடைகிறான். வைஷ்ணவன் என்னும் நிலையானது, பிராமணனின் முதிர்ந்த பக்குவ நிலையாகும். வைஷ்ணவன் என்பவன் தன்னையுணர்ந்த கற்றறிந்த பிராமணன் என்பதால், ஒரு பிராமணன் முன்னேற்றமடையும்போது அவன் வைஷ்ணவனின் நிலைக்கு வர வேண்டியது அவசியம்.

ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி துவக்கத்திலிருந்தே ஒரு வைஷ்ணவராக இருந்ததால், வர்ணாஷ்ரம தர்மத்தின் சடங்குகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் அவருக்கு

இல்லை. பக்குவப்படாத மனிதனை பகவானின் தூய பக்தனாக (வைஷ்ணவனாக) மாற்றுவதே வர்ணாஷ்ரம தர்மத்தின் இறுதிக் குறிக்கோள். எனவே, முதல் தரமான வைஷ்ணவரால் (உத்தம அதிகாரி வைஷ்ணவரால்), ஒருவன் வைஷ்ணவனாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, அவன் உடனடியாக பிராமணனாகவும் கருதப்படுகிறான்; அவனது பிறப்போ கடந்த காலச் செயல்களோ கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இக்கொள்கையை ஏற்ற ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, முகமதியர் குடும்பத்தில் பிறந்திருந்த ஸ்ரீல ஹரிதாஸ தாகூரை திருநாமத்தின் ஆச்சாரியராக அங்கீகரித்தார். வைஷ்ணவராகப் பிறந்ததால், ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியினுள் பிராமணத் தன்மையும் அடங்கியிருந்தது என்பதே இதன் முடிவாகும். எவ்வித சடங்குகளுக்கும் உட்பட வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை. கிராதன், ஹூணன், ஆந்திரன், புலிந்தன், புல்கஷன், ஆபீரன், சும்பன், யவனன், கஸன், அல்லது இன்னும் மோசமான எந்தவொரு தாழ்ந்த பிரிவில் பிறவியெடுத்திருந்தாலும், வைஷ்ணவர்களின் கருணையால் ஒருவன் மிகவுயர்ந்த தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட முடியும். நைமிஷாரண்ய முனிவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு முன்பாக, ஸ்ரீ சூத கோஸ்வாமி தனது ஆன்மீக குருவான ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமிக்கு தமது பணிவான வணக்கங்களை சமர்ப்பிக்கின்றார்.

## ஸ்லோகம் 3

*ய: ஸ்வானுபாவம் அகில-ஷ்ருதி-ஸாரம் ஏகம்*
*அத்யாத்ம-தீபம் அதிதிதீர்ஷதாம் தமோ 'ந்தம்*
*ஸம்ஸாரிணாம் கருணயாஹ புராண-குஹ்யம்*
*தம் வ்யாஸ-ஸூனும் உபயாமி குரும் முனீனாம்*

## மொழிபெயர்ப்பு

முனிவர்களுக்கெல்லாம் ஆன்மீக குருவும், வியாசதேவரின் புதல்வருமான அவர் (சுகர்), பௌதிக வாழ்வின் இருள் சூழ்ந்த பிரதேசங்களை கடக்கப் போராடும் ஆழ்ந்த பௌதிகவாதிகளின் மீதுள்ள பெருங் கருணையினால் வேத அறிவின் சாரமாகிய இந்த மிக இரகசியமான புராணத்தை சுயமாக கிரகித்து அனுபவித்த பின் உரைத்தார். அவரை நான் வணங்குகிறேன்.

## பொருளுரை

இந்த பிரார்த்தனையில் ஸ்ரீல சூத கோஸ்வாமி ஸ்ரீமத் பாகவதத்தின் முழு முன்னுரையையும் சுருக்கிக் கூறுகிறார். ஸ்ரீமத்பாகவதம், வேதாந்த சூத்திரங்களின் மீதான இயற்கையான வியாக்கியானமாகும். வேதாந்த சூத்திரங்கள் எனப்படும் பிரம்ம சூத்திரங்கள், வேத ஞானத்தின் சாராம்சத்தை வழங்கும் நோக்கத்துடன் வியாஸதேவரால் தொகுக்கப்பட்டன. ஸ்ரீமத் பாகவதம், அந்த சாராம்சத்திற்கு அளிக்கப்பட்ட இயற்கையான விளக்கமாகும். வேதாந்த சூத்திரத்தை முற்றிலுமாக உணர்ந்த பண்டிதர் என்ற முறையில், ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி, அதன் விளக்கவுரையான ஸ்ரீமத் பாகவதத்தையும் தனிப்பட்ட முறையில் அனுபவித்திருந்தார். மேலும், அறியாமையை முற்றிலுமாகக் கடக்க விரும்பும் மயக்கத்திலுள்ள பௌதிகவாதிகளின் மீதுள்ள எல்லையற்ற கருணையினால், இந்த பரம இரகசியத்தை முதல்முறையாக அவர் உரைத்தார்.

பௌதிகத்தில் ஆழ்ந்துள்ளவன் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைப் பற்றி விவாதிப்பதில் அர்த்தமில்லை. பௌதிகப் படைப்பில்--மிகப்பெரிய பிரம்மாவாக இருந்தாலும் சரி, அற்பமான எறும்பாக இருந்தாலும் சரி--அவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான நிரந்தர திட்டங்களைத் தீட்டுவதற்கு அனைவருமே முயற்சி செய்கின்றனர், ஆனால் ஜட இயற்கையின் சட்டங்களினால் அனைவருமே குழம்பியுள்ளனர். எனவே, ஜடவுலகம், பகவானுடைய படைப்பின் இருண்ட பிரதேசம் என்று அழைக்கப்படுகின்றது. இருப்பினும், மகிழ்ச்சியற்ற பௌதிகவாதிகள், வெளியேற வேண்டும் என்று விரும்பும் பட்சத்தில், இதிலிருந்து வெளியேறிவிட முடியும். தப்பிவிட வேண்டும் என்ற எண்ணம்கூட இல்லாத அளவிற்கு முட்டாள்களாக இருப்பது அவர்களின் துரதிர்ஷ்டமே. இதனால், தனது இரத்தத்துடன் கலந்த முட்செடிகளின் சுவையை விரும்பி அனுபவிக்கும் ஒட்டகத்துடன் அவர்கள் ஒப்பிடப்படுகின்றனர். அச்சுவை தனது சொந்த இரத்தம் என்பதையும், தனது நாக்கு முட்களால் கிழிக்கப்படுவதையும் அந்த ஒட்டகம் உணர்வதில்லை. அதுபோலவே, தனது சொந்த இரத்தம் தேனைப் போல தித்திப்பாக இருப்பதாக பௌதிகவாதி எண்ணுகிறான்; மேலும், தனது சொந்த பௌதிகப் படைப்புக்களால் எப்பொழுதும் துன்புறுத்தப்பட்டாலும், அதிலிருந்து தப்புவதற்கு அவன் விரும்புவதில்லை. இத்தகைய பௌதிகவாதிகள், 'கர்மிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். இலட்சக்கணக்கான கர்மிகளில் வெகு சிலரே பௌதிக ஈடுபாடுகளில் களைப்படைந்து, இந்த வலையிருந்து வெளியேற விரும்புகின்றனர். இத்தகைய புத்திசாலிகள், 'ஞானிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். வேதாந்த சூத்திரம் இத்தகைய ஞானிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பரம புருஷரின் அவதாரமான ஸ்ரீல வியாசதேவர், மனசாட்சியற்ற மனிதர்களால் வேதாந்த சூத்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்பதை முன்கூட்டியே அறிய முடிந்த காரணத்தினால், வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கவுரையாக பாகவத புராணத்தை அவரே தொகுத்து வழங்கினார். இந்த பாகவதம் பிரம்ம சூத்திரங்களின் மீதான மூல வியாக்கியானம் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே முக்தி பெற்று தெய்வீக நிலையிலிருந்த, தமது சொந்த புதல்வரான ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமிக்கும் ஸ்ரீல வியாசதேவர் பாகவதத்தை உபதேசித்தார். அதனைத் தனிப்பட்ட முறையில் அனுபவித்த பின்னர், ஸ்ரீல சுகதேவர் அதை விளக்கினார். ஸ்ரீல சுகதேவரின் கருணையால், பௌதிக வாழ்விலிருந்து வெளியேற விரும்பும் அனைத்து உண்மையான ஆத்மாக்களுக்கும் பாகவத-வேதாந்த-சூத்திரம் தற்போது கிடைத்துள்ளது. (தொடரும்)

# கோவையில் தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி



இஸ்கான் இயக்கத்தின் ஜிபிஸி உறுப்பினர்களில் ஒருவரான தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி மஹாராஜ் அவர்கள், கடந்த ஜனவரி 26ஆம் தேதி முதல் பிப்ரவரி 7ஆம் தேதி வரை கோயம்புத்தூரில் தங்கியிருந்தார். தினசரி மாலை நேரத்தில் சொற்பொழிவாற்றிய அவர், பக்தியின் அன்றாட பயிற்சி குறித்து பக்தர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து தெளிவுபடுத்தினார். நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோருக்கு அவர் தமது திருக்கரங்களால் பிரசாதம் வழங்கி ஆசிர்வதித்தார். ஜனவரி 29ஆம் தேதியன்று ‘‘ஆஸ்ரயா’’ என்னும் பெயரில் தற்போதைய இஸ்கான் கோவிலுக்குப் பின்புறம் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார். கல்லூரி மாணவர்கள் ஒழுக்கமான வாழ்வையும் கிருஷ்ண பக்தியையும் பயிற்சி செய்வதற்கு இது பெருதவியாக அமையும். மேலும், அருங்காட்சியகம், ஆன்மீகத் திரையரங்கம், ஸம்ஸ்கார மண்டபம், கோவிந்த உணவகம் மற்றும் விருந்தினர் மாளிகையுடன் புதிதாகக் கட்டப்படவுள்ள ராதா கிருஷ்ணர் கோவிலுக்காக, பூமி பூஜை மற்றும் அனந்தசேஷ ஸ்தாபனம், தவத்திரு ஜெயபதாக ஸ்வாமியின் தலைமையில் ஜனவரி 30அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை பல்வேறு பக்தர்கள் அவரிடமிருந்து தீட்சை பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**இடது:** தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி மஹாராஜரிடமிருந்து பக்தர் ஒருவர் தீட்சை பெற்ற காட்சி

**மேலே:** அனந்தசேஷ ஸ்தாபன நிகழ்ச்சியில் நடைபெற்ற யாகம்

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(மார்ச் 1, 2011 முதல் ஏப்ரல் 15, 2011 வரை)**

### மார்ச்

1, செவ்வாய், ஸ்ரீல ஈஸ்வர பூரி மறைவு நாள்

5, சனி, ஸ்ரீல ஜகந்நாத தாஸ பாபாஜி மறைவு நாள்
ஸ்ரீ ரஸிகானந்தர் மறைவு நாள்

16, புதன், அமலகி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:21–10:23

17, ஸ்ரீல மாதவேந்திர பூரி மறைவு நாள்

19, கௌர பூர்ணிமா, ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத் திருநாள், மாலை வரை விரதம்

20, ஸ்ரீ ஜகந்நாத மிஸ்ரர் பண்டிகை

26, ஸ்ரீவாஸ பண்டிதர் தோன்றிய நாள்

30, பாபமோசனி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:13–10:17

### ஏப்ரல்

8, ஸ்ரீல இராமானுஜாசாரியர் தோன்றிய நாள்

12, ஸ்ரீ இராம நவமி, பகவான் ஸ்ரீ இராமர் தோன்றிய நாள்
(மதியம் வரை விரதம்)

14, கமட ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04 - 10:11

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.






## மே மாதம் முதல்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

# பகவத் தரிசனமாக

## பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**

### நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும் உங்கள் இல்லம் தேடி வர, சந்தாதாரராக மாறுங்கள்.

ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**




தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க
124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553